உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 031 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 12, சனிக்கிழமை 27.12.2014

வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளை மழை பெய்யக் கூடும்.

# கண்ணீரில் கரைந்த கரையோரங்கள்

## ஆழிப் பேரலை இடரின் 10 ஆவது நினைவு தினம் நேற்று

யாழ்ப்பாணம், டிசெ.27
ஆழிப் பேரலை இடரின் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் உணர்வுபூர்வமாக நேற்று நடைபெற்றன. ஆழிப் பேரலையின் கோரத் தண்டவத்தில் தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் நேற்றுக் கண்ணீருடன் அவர்களை நினைவேந்தினர்.
யாழ். மாவட்டத்தில் அதிகளவு இழப்பை எதிர்கொண்ட வடமராட்சி கிழக்கில் உடுத்துறையில் பிரதான நிகழ்வு இடம்பெற்றது. நேற்றுக் காலை 9.20 மணி அளவில் இந்நிகழ்வு ஆரம்பமானது. அஞ்சலி வணக்கம் செய்யப்பட்டு தொடர்ந்து பொதுச்சுடரேற்றப்பட்டது. அந்நேரம் அங்கு கூடியிருந்த அனைவரும் தத்தம் உறவுகள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடங்களில் ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். அங்கு வெவ்வேறு இடங்களில் பக்.21



# பதுளையில் பேரிடர்

## மண் சரிவில் சிக்கி 20 பேர் சாவு பலர் மாயம்; மீட்பு பணி தொடர்கிறது



கொழும்பு, டிசெம்பர் 27
பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர். பலரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
பதுளை மாவட்டத்தின் கொஸ்லந்தை மண்சரிவு இடம்பெற்று 35 பேர் வரையில் உயிரிழந்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே அடுத்த பேரிடர் பதுளை மாவட்டத்தை மீண்டும் தாக்கியுள்ளது.
ஆழிப்பேரலை பேரிடர் இடம்பெற்று 10 வருட நினைவை நாட்டு மக்கள் நேற்று துயரத்துடன் கடைப்பிடித்த வேளை, பதுளையில் இடம்பெற்ற இந்த இடரானது மக்களின் துயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.
கல்கந்தை, ரில்பொல மற்றும் ஹேகொடை பிரதேசங்களிலும், ஹாலிஎல பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிகளிலும் ஏற்பட்ட மண் சரிவினால் 20 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, இடரில் சிக்குண்டு மேலும் 10 பேர் பக்.25

## வாக்களிக்க தவறியோர் 30 ஆம் திகதி அளிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
இதுவரையில் வாக்களிக்கத் தவறிய தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அன்றைய தினமே தபால்மூல வாக்களிப்புக்கான இறுதித் தினம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது. பக்.25

## மழையை எதிர்கொள்ள தேர்தல்கள் திணைக்களம் தயாராகிறது

கொழும்பு, டிசெ. 27
மழை காரணமாக ஏற்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். குறிப்பாக படகுகளைத் தயார் நிலையில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு இன்னமும் 12 நாள்களே உள்ளன. இந்தநிலையில் நாட்டின் பல பக்.25

## வெளியேறினார் பைஸர் முஸ்தபா

கொழும்பு, டிசெ. 27
ஆளும் கட்சியிலிருந்து பொது எதிரணிக்கு கட்சிக்கு தாவுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட, பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா நேற்று பிற்பகல் 2.45 மணிக்கு நாட்டில் இருந்து வெளியேறி, சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். அவருக்கு முன்னர் அவரது தந்தையும் நண்பகல் 12.30 மணியளவில் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளதாக விமானநிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இலங்கைக்கு திரும்பியதும் பிரதியமைச்சர் முஸ்தபா ஜனாதிபதித் தேர்தலில் தனது பக்.25

## தமிழர் பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டும்

### சிறிதுங்க ஜயசூரிய




யாழ்ப்பாணம், டிசெ. 27
தமிழ் மக்களுக்குப் பிரிந்து செல்வதுதான் விருப்பம் என்றால் – அவர்களைப் பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டும். இதுதான் எமது கொள்கை. கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சொன்ன விடயம் சரி. ஆனால் அதற்காக செய்த விடயம்தான் தவறு. – இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள அவர், பஸ்தியன் விடுதியில் நேற்று நண்பகல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
நாட்டு மக்கள் எவருமே தற்போது ஜனாதிபதித் தேர்தல் வேண்டும் என்று கேட்கவில்லை.
ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் நடத்துகின்றார். அவரது சோதிடரான சுமணசிறி சொன்ன சொல்லைக் கேட்டு இரண்டு வருடங்களுக்கு முன்னராகவே தேர்தல் நடத்துகின்றார். பக்.19

## நீர் நிறைந்த பாத்திரத்தில் வீழ்ந்து குழந்தை சாவு

யாழ்ப்பாணம், டிசெ.27
நீர் நிறைத்து வைக்கப்பட்டிருந்த பெரிய சமையல் பாத்திரம் ஒன்றுக்குள் தவறி வீழ்ந்து 3 வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் பளையில் நேற்றுக் காலை நடந்துள்ளது.
தர்மகேணியைச் சேர்ந்த விஜயேந்திரன் வினுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
விளையாடிக் கொண்டிருந்த குழந்தை எவரும் கவனிக்காத நேரத்தில் நீர் நிறைந்த பாத்திரத்தில் வீழ்ந்து மூழ்கி உயிரிழந்துள்ளது.
உயிரிழந்த குழந்தையின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.(ற)

## தேர்தல் விதி மீறல்களை கவனிக்காத அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27
வடக்கில் தேர்தல் விதிமுறை மீறல்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும், அது தொடர்பில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளோ, தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் வடக்கிலும் சூடு பிடிக்கத் பக்.25

## கடலில் மிதந்து வந்த கஞ்சா பொதி மீட்பு

வடமராட்சி, டிசெ. 27
பருத்தித்துறை இன்பர்சிட்டி கடலில் கரையொதுங்கிய நிலையில் 25 கிலோ கஞ்சாப் பொதிகளை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுக் காலை கைப்பற்றினர். தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அங்கு சென்ற பொலிஸ் குழுவே கஞ்சாப் பக்.25

# பதிவுகள்

உடுத்துறை



ஆழிப்பேரலை இடரின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தில் தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் கண்ணீருடன் நேற்று நினைவு கூர்ந்தனர்.



முல்லைத்தீவு



வவுனியா



மன்னார்



மட்டக்களப்பு



கல்முனை



மணற்காடு



# ஜனரஞ்சகம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களது உடமைகளை கவனமுடன் பார்த்துக் கொள்ளவும். பணம் மற்றும் புதிய நண்பர்கள் சேர்க்கை கிடைக்கும். செய்கின்ற தொழிலில் கவனமுடன் செய்ய வேண்டும். புதிய தொழில் தொடங்கலாம்.

**இடபம்:** நம்பிக்கை உகந்தவர்களாக பழகுவார்கள். வரவுக்குத் தகுந்த செலவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வேலையாள்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

**மிதுனம்:** உறவினர்களாலும் தொல்லைகள் வரலாம். வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்ற சேவைத்துறையில் இருப்பவர்கள் சீரான நிலையில் இருப்பார்கள். இடமாற்றம் கிடைக்கும்.

**கடகம்:** முதலீடு இல்லாத புதிய தொழில் தொடங்குவதற்கும் உங்களுக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். அலுவலக கணக்கு வழக்குகளை மிகச்சரியாக கையாளுதல் நல்லது.

**சிங்கம்:** உங்களின் சேமிப்புகளில் கை வைக்க வேண்டி வரலாம். கவனம் தேவை. எனவே அதை முடிந்த வரை தவிர்க்கவும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**கன்னி:** வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கூடுதல் சுமைகள் வந்து சேரும். வேலையில் எரிச்சல் மற்றும் சோம்பேறித்தனத்தை முற்றிலும் விடுவது நல்லது. உங்கள் உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.

**துலாம்:** மேற்படிப்பு சம்பந்தமாக வெளியூர் சென்று தங்கி பயிலும் வாய்ப்புக் கிட்டும். பெரியவர்களின் ஆசிர்வாதம் பரிபூரணமாகக் கிடைக்கும். அவர்களின் ஆசீர்வாதங்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**விருச்சிகம்:** வெற்றி உங்களை வந்தடையும். உங்களின் முன்னேற்றத்துக்கு நண்பர்கள் இருப்பார்கள். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும்போது தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது.

**தனுசு:** வீண் அலைச்சலும், வாக்குவாதமும் அவ்வப்போது வாட்டி வதைக்கும். எலும்பு சம்பந்தப்பட்ட ரோகம் வந்தால் உடனடியாக மருத்துவரிடம் ஆலோசனைகள் பெறுவது நல்லது.

**மகரம்:** உடன்பிறந்தவர்கள் வழியில் நிலவி வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நலம். சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தேறும்.

**கும்பம்:** பொழுதுபோக்கான விழாக்களில் கலந்து கொள்வீர்கள். உங்களை விட்டுப் பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்வார்கள்.

**மீனம்:** வெளிநாடு சென்று பயில வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அதற்குண்டான காலம் கனிந்து வரும். கலைத்துறையினர் சார்ந்தவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் உண்டு.

## எபோலாவுக்கு தீர்வு



மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா, சியாரா லியோன் ஆகியவற்றில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவு வாங்கிய எபோலா வைரஸ் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் கொடிய எபோலா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கான தடுப்பு மருந்தை சீனா கண்டுபிடித்துள்ளது. இந்த புதிய தடுப்பு மருந்தை மாத இறுதியில் மனிதர்களுக்கு செலுத்தி சோதனை செய்ய உள்ளதாக சீன தெரிவித்துள்ளது. இதனூடாக எபோலா கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## முகப் புத்தகத்தில் சுட்டது












## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

உன் மனைவிக்கும், உன் அம்மாவுக்கும் சண்டை வந்தால், நீயும் உன் அப்பாவும் எந்தப் பக்கம் இருப்பீங்க ?

நான் வாசல் பக்கமாக, எங்கப்பா கொல்லைப் பக்கமா நிற்போம்.

ஆசிரியர்: எவன் ஒருவனால் ஒரு விடயத்தை மற்றவர்களுக்கு தெளிவாக புரிய வைக்க முடியவில்லையோ, அவன் ஒரு முட்டாள் என்று அர்த்தம்.

மாணவர்கள்: நீங்கள் சொல்லுறது, பாடம் நடத்துறது, எதுவுமே புரியவில்லை சேர்...

## உப்பு வேண்டாம்



உப்பு நுகர்வை குறைத்தால் தலையிடியை மூன்றில் ஒரு பங்கு குறைக்க முடியும் என்று புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உப்பு நுகர்வை நாளொன்றுக்கு 3 கிராமாக குறைத்தால், தலையிடி பெருமளவு குறையும் என்றும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

3 கிராம் உப்பு அரைத் தேக்கரண்டி அளவாகும். உப்பு நுகர்வை குறைக்கும் போது இரத்த அழுத்தம், இதய துடிப்பு அழுத்தம் குறைவதால் தலையிடி குறைகின்றது என்று அந்த ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உண்மையிலே அம்மா



தொலைக்காட்சித் தொடரில் நடித்துவரும் விஜி, தொடர்களில் மாத்திரம் அல்ல உண்மையிலும் தனது பாசத்தால் ஏனைய நடிகர்கள் மனதில் அம்மாவாக உருவெடுத்துள்ளார்.

நடிகை சரிதாவின் தங்கையான விஜி, சூப்பர் ஸ்ரார் ரஜினிகாந் நடித்த தில்லு முல்லு படத்தில் அறிமுகமானவர். தொடர்ந்து திரைப் படங்களில் நடித்தாலும், பின்னர் தொடர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பந்தம், ரேவதி, குடும்பம் ஒரு கோயில், அண்ணாமலை, பெண் என்று பல்வேறு தொடர்களில் நடித்திருக்கின்றார். இவரை அம்மா கதாபாத்திரத்தில் அதுவும் 'சென்டிமென்டான' கதாபாத்திரத்திலேயே நடிக்க வைத்து வருகின்றார்கள். தற்போது அழகி தொடரிலும் அப்படித்தான் நடித்து வருகின்றார்.

இவர் தொடரில் மாத்திரமல்ல உண்மையிலும் சென்டிமென்டான கதைகள் சொல்லி, படப்பிடிப்பில் இருப்பவர்களை தன்னுடன் நெருக்கமாக வைத்திருக்கின்றாராம். அத்துடன் வீட்டிலிருந்து கொண்டு வரும் சாப்பாட்டை ஏனைய நடிகர்களுடன் பகிர்ந்து உண்கின்றாராம்.

# செய்திகள்

# மோட்டார் சைக்கிள் வழங்கலில் பாரபட்சம்

## 175 பேர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்



கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் கடமையாற்றும் பெண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அரசினால் மோட்டார் சைக்கிள் வழங்குவது தொடர்பாக அறிவிக்கப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம், கரைச்சி, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 375 பேர் கடந்த ஓகஸ்ட் மாதம் மோட்டார் சைக்கிளுக்குரிய முழுத் தொகையையும் செலுத்தியிருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில்பயணம்செய்தபோது 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அவ்வேளையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பான ஆதங்கம்கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'உதயனி'ல் செய்தியாக வெளிவந்திருந்தது.

இதனையடுத்து மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பணிபுரிவோருக்கு நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் வழங்கப்படுமெனவும், பணம் செலுத்திய அனைத்துப் பெண் வெளிக்கள உத்தியோகத்தர்களையும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி மாவட்ட அலுவலங்களில் கடமையாற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட 375 பேரும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தைக் கைவிட்டு மாவட்டச் செயலக முன்றிலில் கூடினர்.

அவ்வேளையில் தற்போது 200 மோட்டார் சைக்கிள்கள் வந்துள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு வழங்கிவிட்டு மிகுதி இருப்பின் கரைச்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதனால் தூர இடங்களிலிருந்து வந்த பெண் உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அல்லது ஒவ்வொரு செயலகத்துக்கும் தலா 50 வீதம் வழங்குமாறும் கோரினர்.

இவற்றை நிராகரித்த மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள், மாவட்டச் செயலகத்தின் அனைத்துப் பெண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள்களை வழங்கிவிட்டு மிகுதியைக் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பணிபுரிவோருக்கு வழங்கினர்.

பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்களுக்கு அவை வழங்கப்படவில்லை.

மோட்டார் சைக்கிள் பெறச் சென்ற பெண் அலுவலர்கள் ஏமாற்றத்துடனும் மனம் வருந்திய நிலையிலும்அழுதவண்ணம்வாகனங்களில் ஏறி வீடு திரும்பினர்.

வழங்கப்படாத 175 பெண் உத்தியோகத்தர்களுக்கு விரைவில் மோட்டார் சைக்கிள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது, கடந்த 24ஆம் திகதி 200 மோட்டார் சைக்கிள்கள் வந்ததாகவும், நேற்று முன்தினம் காலை மாவட்டச் செயலகத்துக்கு வந்து டோக்கனைப் பெற்றுக் கொள்ளுமாறும், 200 வரை டோக்கன் பெறுபவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படுமெனவும் அறிவித்ததாகவும், அதன் பிரகாரம் நேற்று 336 பேர் டோக்கன் பெற்றதாகவும், அவர்களில் 200 பேர் வரையான டோக்கன் பெறுபவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகவும், முதல் 200 இலக்கம் வரை டோக்கன் பெற்ற மாவட்டச் செயலகம், கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



ஏ-9 வீதி வழியாக நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவ கனரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மட்டுவில் அம்மன் கோயிலுக்கு அருகில் மின் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த இராணுவத்தினர் சிறிய காயங்களுடன் உயிர் பிழைத்தனர். இதனால் அந்தப் பகுதியில் நேற்றுக் காலை மின்சாரம் தடைப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-21)

# இமையாணனில் மூவருக்கு டெங்கு

## ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்



கரணவாய்,டிசெ.27

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இமையாணன் கிராமத்தில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான மூவர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து அந்தப் பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இமையாணன் கலைமகள் சனசமூக நிலைய வீதிப் பகுதியில் மூன்று பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தமை பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டது.

இதனை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.சுதோகுமார் தலைமையிலான குழுவினர் டெங்கு நுளம்பு பெருகுவதற்குரியசூழலை இனங்கண்டு அவற்றை அழித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள முன்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த சிங்கம்மாதிரிச்சிலையின்உள்ளேயும், அதன் கீழும் தேங்கியிருந்த நீரில் பெருமளவான டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. அங்கு விளையாடுவதற்குச் சென்ற இளைஞர்களே டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். டெங்கு நுளம்பு பெருகும் சூழல் பொதுச் சுகாதார அலுவலர்களின் உதவியுடன் உடனடியாக அழிக்கப்பட்டது.

இதேவேளை– இந்தப் பகுதியில் மேலும் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதால் இன்று சனிக்கிழமை இமையாணன் கிராமம் முழுவதும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுப் புகையூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனச் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமானால் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று இரத்தப் பரிசோதனை செய்யுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-108)

# பாஷையூரில் தாக்குதல்; ஒருவருக்கு கை முறிவு



யாழ்ப்பாணம், டிசெ. 27

பாஷையூரில் மதுபோதையில் அட்டகாசம் புரிந்தவர்கள் மீது இனம் தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிறிஸ்மஸ் தினமான நேற்று முன்தினம் அதிகாலை பாஷையூர் கடற்கரைப் பகுதியில் மது போதையில் நின்றிருந்த இளைஞர் சிலர் அந்தப் பகுதியால் சென்ற இளைஞர்கள் சிலரைத் தாக்கியுள்ளனர்.

இதனை அடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற இனந்தெரியாதோர் மது போதையில் அட்டகாசம் புரிந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர். இதனையடுத்துப் பாஷையூர் சந்தைப் பகுதியில் கை முறிந்து காயங்களுடன் காணப்பட்ட ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-23)

# கட்டாக்காலி மாடுகளால் பயிர் அழிவு

தென்மராட்சி,டிசெ.27

மறவன்புலோ வயல்களில் இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் நெற்பயிர்களை அழித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் கூட்டமாக வரும் 30 இற்கு மேற்பட்ட மாடுகள் வயல்களில் இறங்கிப் பயிர்களை அழித்து வருவதாகவும், இது தொடர்பாகப் பிரிவு கிராம அலுவலர், கமக்கார அமைப்பு கமநல சேவைகள் நிலையம் உட்பட பலருக்கு அறிவித்தும் பயன்கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தனர். (த-9)

# நுளம்பிலிருந்து தப்பிக்க குழந்தைகளுக்கு மருந்து

யாழ்ப்பாணம், டிசெ. 27

நுளம்பு குத்துவதிலிருந்து தப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்து ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இன்று காலை 8 மணியிலிருந்து அந்த மருந்துகள் வழங்கப்படும் என்று சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.தர்சன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அந்த மருந்து வழங்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4-9)

செய்திகள்

# பாலங்கள் அமைப்பிலும் புறக்கணிப்பு

## வடக்குக்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 27

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்களில் வடக்கு மாகாணம் மாத்திரம் புறக் கணிக்கப்பட்டுள்ளது. கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம், கிராமப் புற பாடசாலைகளின் சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைத் திட்டம் என்பவற்றில் புறக்கணிக்கப்பட்டதைப் போன்று கிராமிய பாலங்கள் அமைக்கும் திட்டத்திலும் வடக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக கொழும்பு அரசால் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்துக்கே அதிக நிதி ஒதுக்கப்படுவதாக அரசு குறிப்பிடுகின்றது.

ஆனால் ஒதுக்கப்படும் நிதிகள் தொடர்பில், அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கைகள் ஆண்டு தோறும் வெளியிடப்படும். அவ்வாறு வெளியிடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அறிக்கை மூலமே, வடக்கு மாகாணத்துக்கு எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்யப்படாத விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. (த-5)

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி (மில்லியனில்) |
|---|---|
| கொழும்பு | 390 |
| கம்பஹா | 390 |
| களுத்துறை | 320 |
| கண்டி | 390 |
| மாத்தளை | 120 |
| நுவரேலியா | 150 |
| காலி | 300 |
| மாத்தறை | 210 |
| அம்பாந்தோட்டை | 150 |
| யாழ்ப்பாணம் | - |
| மன்னார் | - |
| வவுனியா | - |
| முல்லைத்தீவு | - |
| கிளிநொச்சி | - |
| மட்டக்களப்பு | 90 |
| அம்பாறை | 150 |
| திருகோணமலை | 90 |
| குருநாகல் | 280 |
| புத்தளம் | 180 |
| அநுராதபுரம் | 210 |
| பொலநறுவை | 120 |
| பதுளை | 270 |
| மொனராகலை | 140 |
| இரத்தினபுரி | 360 |
| கேகாலை | 225 |



இயேசு பிறப்பு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வளாகத்தில் புல்லினாலான சுமார் 60 அடி உயரமுள்ள கிறிஸ்மஸ் மரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (த-17-135)

# மக்கள்-பொலிஸார் இடையே உறவுக்கே நடமாடும் சேவை

## பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித கூறுகிறார்




வடமராட்சி, டிசெ 27

மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தொடர்பாடலை வலுப்படுத்தவே ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளிலும் நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது என வட பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் இறுதி நாள்நிகழ்வு நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் பெரேரோ தலைமையில் கலிகை கந்தன் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஏற்கனவே கிழக்கு ஊவா மத்திய, மேல் மாகாணங்களில் பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த காலங்களில் அங்கு இத்தகைய நடமாடும் சேவைகளை நடத்தியிருந்தேன். அதில் வெற்றியும் கண்டிருக்கிறேன். அதனால் வடபிராந்தியத்திற்குப் பிரதி பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றபோது பொது மக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே தொடர்பாடலை அதிகப்படுத்த இத்தகைய நடமாடும் சேவைகளை நடத்தத் திட்டமிட்டு அதற்கான பணிப்புரைகளைச் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கினேன்.

அந்த வகையில் வடபிராந்தியத்தில் உள்ள 52 பொலிஸ் நிலையங்களிலும் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதனை கிராம அலுவலர்கள், அரச அதிகாரிகள், பொலிஸார் சேர்ந்து முன்னெடுத்திருந்தோம். இதனுள் சமய ரீதியான செயற்பாடுகள், சுகாதார விழிப்புணர்வு, மாணவர்களிடையிலான போட்டிகள், வீதியொழுங்கு பற்றிய விழிப்புணர்வு, கலாசார நிகழ்வுகள் என பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன-என்றார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் நிகழ்த்தினார். தொடர்ந்து கிராம அலுவலர்கள் தமது பிரதேசம் தொடர்பான பிரச்சினைகளைப் பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இந்த நிகழ்வில் பொலிஸாரினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசுகளைப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கினார். (த-108-109)

# குழு மோதலில் இருவர் படுகாயம்

கரணவாய், டிசெ. 27

வடமராட்சியில் இரு பகுதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கைகலப்பில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள நவிண்டில் ஸ்ரீ அம்பாள், நவிண்டில் கலைமதி ஆகிய பகுதிகளில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் அந்தப் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்தில் இரு குழுக்களுக்குமிடையில் ஏற்பட்ட பகைமையே நேற்று முன் தினம் மோதல் வெடித்தது.

நேற்று முன்தினம் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி நிறைவடைந்த வேளையில் இரு குழுக்களுக்கும் இடையில் மோதல் ஆரம்பமானது. அது நேற்றுப் பெரும் மோதலாக மாறியதால் கையில் அகப்பட்ட பொருள்களைக் கொண்டு இரு பகுதியினரும் மோதலில் ஈடுபட்டனர். இதனால் இரு பகுதியைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர்.

கொற்றாவத்தை மலையந் தோட்டத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் தேவகுமார் (வயது-34), நவிண்டில் ஸ்ரீ அம்பாளைச் சேர்ந்த நாகராசா தயாளன் (வயது-34) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்தும் நேற்றுக் காலை முதல் பதற்றமான சூழ்நிலை காணப்படுவதால் மேலதிக பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-108)

# தண்ணீர் தாங்கி அமைக்க உதவி

வலி.வடக்கு, டிசெ 27

ஆனைக்கோட்டை மூத்த பிரஜைகள் சங்கத்தின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நீர்த்தாங்கி அமைப்பதற்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தாங்கி அமைத்துக் கொடுப்பதற்காகப் புளொட் தலைவரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் நிதியுதவியை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து இதற்குரிய நிதி கொடுக்கப்பட்டுள்ளது. மூத்த பிரஜைகள் சங்கத்தின் தலைவர் பொன்கலன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், அபிவிருத்தித் திட்டமிடல் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். (த-86)

# கழிவுகளால் நிரம்பியுள்ள பாஷையூர் மக்கிக் குளம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

பாஷையூர் அந்தோனியார் தேவாலயத்துக்கு முன்பாகவுள்ள மக்கிக்குளம் கழிவு களால் நிரம்பிக் காணப்படுவதால் குளத்தில் தேங்கும் நீர், கால்வாய் ஊடாக வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் குளம் புற்களாலும் கழிவுகளாலும் மூடப்பட்டுக் காணப்படுகின்றது.

அதேவேளை, மக்கிக் குளத்தில் இருந்து செல்லும் கழிவு நீர் வழிந்தோடும் வடிகாலும் கழிவுகளாலும் சகதியினாலும் நிரம்பிக் காணப்படுகின்றது. இந்தக் கால்வாயில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் வீதியால் பயணிக்கும் மக்களும், கால்வாயை அண்டிக் குடியிருப்போரும் சிரமப்பட்டு வருகின்றனர்.



வளரும் புற்களாலும் மற்றும் கழிவுகளாலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தக் குளத்தில் இருந்து வெள்ளம் வழிந்தோடுவதற்குரிய வடிகாலைச் சீரமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# செய்திகள்



## பிரதான வீதிகளின் வடிகால்வாய் மூடிகள் பல திறந்த நிலையில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ். நகரின் பிரதான வீதிகளின் அதிகமான வடிகால் வாய்களுக்குமேல் போடப்பட்ட பாதுகாப்பு மூடிகள் திறந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் அபாயங்களை எதிர்கொள்கிறார்கள்.

கே.கே.எஸ். வீதியில் உள்ள கழிவு நீர் ஓடும் வடிகால் வாயில் அனேகமான பாதுகாப்பு மேல் மூடிகள் கழற்றப்பட்ட நிலையில் உள்ளன.

சனநெரிசல் அதிகரித்துக் காணப்படும் குறித்த பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வடிகால்வாயின் மூடிகள் கழற்றப்பட்டுள்ளதால் வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் அபாயங்களுக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாகச் செல்லும் வடிகால் வாயின் மேல்தள மூடிகள் சில கழற்றப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் குறித்த வடிகால்வாயின் கழிவு நீர் தேங்கி நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. (வ-17)



சாவகச்சேரி டச்சுவீதி மருதடிச்சந்தியால் பயணிக்க முடியாத நிலையில் சீர்கேடாக உள்ளது. வீதிக்கு அருகாமையில் சமையலறைக்கழிவுப்பொருள்கள்,குப்பைகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம்வீசி சூழல் மாசடைந்து காணப்படுகின்றது. இதனால் அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வசிக்கின்றனர். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகாரிகள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (வ)

## பிறிஜ்லிங் லங்கா சிறுவர்கள் நத்தார் ஒன்றுகூடல்

மன்னார், டிசெ.27

வெள்ளத்தால்பாதிக்கப்பட்டுள்ள மன்னார் சிறார்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையையும், கிறிஸ்தவர்கள், ஏனைய மதத்தினருக்கு மகிழ்ச்சியைப் பரிமாறவேண்டும்என்றும் பிறிஜ்லிங் லங்கா சிறுவர்கள் ஒன்றுகூடலின்போது அதன் பணிப்பாளர் ஜெரமி லியனகே தெரிவித்தார். மூர் வீதியில் அமைந்துள்ள பிறிஜ்லிங் லங்கா காரியாலயத்தில் 25 இற்கும் மேற்பட்ட சிறுவர்களின் ஒன்றுகூடல் கடந்த 22 ஆம் திகதி மாலை நடைபெற்றது. 2014 ஆண்டில் கல்விப் பணியின் கீழ் 'சிறுவர்களுக்கான ஆங்கிலம் கற்போம்' என்றகருப் பொருளில் ஆங்கில நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அந்த நூலகத்தில் மாலை 4-6 மணிவரை வெளிநாட்டு, உள் நாட்டு ஆசிரியர்களால் வாய் மூல இலவச ஆங்கில வகுப்பு நடைபெற்று வருகின்றது. மேலும், மன்னார் பாடசாலை சிறார்களுக்கான ஒன்லைன் ஆங்கில வகுப்பும், வளர்ந்தோருக்கான ஆங்கிலம் பேசும் திறமையும், பயிற்சியும் நடைபெற்று வருகின்றன. (வ)



## 'சரயு' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.27

தேசியகல்விநிறுவகத்தின்யாழ். பிராந்திய பட்டப்பின் கல்விடிப்புளோமா கற்கை நெறி மாணவர்களின் கற்கை நெறி நிறைவை முன்னிட்ட ஒன்று கூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவரும் புனித பத்திரிசியார் கல்லூரி உப அதிபருமாகிய அருட்பணி எஸ். ஏ.றொஷ்ஷான் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பட்டமேற் கல்விடிப்புளோமா கற்கைநெறிக்கான யாழ். இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் கலந்து கொண்டார். நிகழ்வில் 'சரயு' என்ற சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. கற்கை நெறியின் உளவியல் பாடவிரிவுரையாளரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபருமாகிய ச.லலீசன் 'சரயு' சஞ்சிகையை வெளியீட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக் கொண்டார். கற்கை நெறி விரிவுரையாளர் மீனேஸ்வரன், ஆசிரிய மாணவர்களான சி.ஹர்ஷஷன், ஏ.உதயகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (வ-23)





கைதடி லயன்ஸ்கழகத்தினர் கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாமை அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடத்தினர். முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ்கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் மற்றும் லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (வ-9)

## குருதிக்கொடை முகாம் நாளை



யாழ்ப்பாணம், டிசெ.27

வல்வெட்டித்துறைபிரதேச மருத்துவமனை நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை சிகிச்சை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை ஸ்ரீ லஷ்மி பவன் சைவ உணவகம், எஸ். எஸ்.வி.ஆர். மரத்தளபாட, பலகை வாணிபம் ஆகியவற்றின் அனுசர்ணையிலும் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை மாவட்ட மருத்துவ அதிகாரி தலைமையிலும் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கியினரும் யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனை இரத்த வங்கியினரும் கலந்து கொண்டு இரத்த சேகரிப்பை மேற்கொள்ளவுள்ளனர். (வ)

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் திருவாசக விழா

யாழ்ப்பாணம்,டிசெ. 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் திருவாசக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார்.

திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடராஜப் பெருமானுக்கும் மாணிக்க வாசக சுவாமிக்கும் விசேட பூசைகள் இடம்பெற்று வீதி உலாவாக விழா மண்டபத்துக்கு வருவதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

வரவேற்புரையை ஆனைப்பந்தி குருகுலம் அபிவிருத்தி உத்தியோகத்தர்திருமதிமா.அனந்த லெட்சுமியும் ஆசியுரையை சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக்குருக்களும் அதைத் தொடர்ந்து தலைமையுரை, முதன்மை விருந்தினர் உரைகளும் சிறப்புச் சொற்பொழிவாக சைவப்புலவர் செ.பாலச்சந்திரனின் 'திருவாசகம் காட்டும் வாழ்வியல்' உரையும் இடம்பெறும்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், திருவாசக விழாவையொட்டி நடத்தப்பட்ட வினாடிவினா போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் இடம்பெறும். (வ-7)

# அம்மாடியோவ்!



இவ்வளவு
போட்டிகளும்
பரிசுகளும்
எமக்கா?

# 30

அகவையில்
உதயன்

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

## ஓவியங்களே!

ஆம்! மாணவச் செல்வங்களைத்தான் அழைக்கின்றோம்!!
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ஓவியம்தான்.
ஓவியங்கள் வரையும் ஓவியம்.

உதயன் தனது 30 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடாத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் ஓவியத் தேர்வு.

தேர்வு செய்யப்படும் ஓவிய மாணவச் செல்வங்களுக்குப் பெரிய அளவிலான பரிசு மழை.

ஓவியத் தேர்வு தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

உங்கள் எண்ணங்களை வண்ணமாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2015.

**புத்தாண்டு அன்று பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்.**
**ஆம்! சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.**

உங்கள் எண்ண ஓட்டங்களை வண்ண ஓவியங்களாக்கி அனுப்பிவைக்கும் போது உதயன் படிவத்திலே உங்கள் பெயர் விவரங்களை, ஓவிய ஆக்கத்துடன் சேர்த்து அனுப்ப மறந்து விடாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் எண்ணக் காவியங்களை வண்ணக் காவியமாக்கும் வகையில் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளைத் தருகின்றோம்.

| பிரிவு | வகுப்புத் தரம் | தலைப்பு |
|---|---|---|
| A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| B | தரம் 06,07,08,09 | பனை வளமும் நாமும் |
| C | தரம் 03,04,05 | பண்டிகை நிகழ்வு |

35 செ.மீ. x 45 செ.மீ. (14" x 18") அளவுடைய வெள்ளை 'பிறிஸ்டல் போட்' அல்லது வெள்ளை நிற கென்ற் (Kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர், சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

உரிய பிரிவில் ஒருவர் ஓர் ஆக்கத்துக்கு மேலாகவும், உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கங்களுடனும் தனித் தனி விண்ணப்பப் படிவம் இணைத்தல் வேண்டும். மாணவரது ஆக்கம் என்பதனை உரிய பாடசாலை உறுதி செய்தலும் அவசியம்.

எங்கே?

வர்ணமய உலகில் சஞ்சரித்து உங்கள் ஆக்கங்களைத் தொடங்கலாம். பாடசாலை தொடங்கியதும் உறுதிப்படுத்தி அனுப்பி வையுங்கள். தேவைப்படும் இடத்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மீண்டும் ஒரு ஆக்கம் ஆக்கத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வளங்களை நாம் வழங்குவோம்.

***வாழ்த்துக்கள்.***

**தமிழ் வளர்ப்போம்**
**தமிழால்**
**இணைவோம்!**

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..................................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..................................................
கற்கும் பாடசாலை: ..................................................
தரம்: ...............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..................................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..................................................
ஆசிரியரின் பாடத்துறை: ..................................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .................................................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

**உதயன்**
பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 10 வருடங்கள் கழிந்தும் சீராகாத ஆழிப்பேரலை இடர் விளைவுகள்

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர், டிசெம்பர் மாதம் இருபத்தாறாம் திகதியன்று, (சுனாமி என்ற) ஆழிப்பேரலை வடக்கு , கிழக்கு மாகாணங்களில் அதிக உயிர் இழப்புக்களையும் சொத்து அழிவுகளையும் கரையோரப் பகுதிகளில் உண்டாக்கி இருந்தது.

ஆழிப்பேரலையால் வடக்கில் அதிகம் பாதிக்கப்பட்டது, அழிவு கண்டது வடமராட்சிப் பிரதேசம் என்பதனை புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆழிப்பேரலையால் அதிக இழப்பை எதிர்கொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலேயே அதிக உயிரிழப்புக்களும், அதே வேளை சொத்தழிவு அம்பாறையில் மிக அதிகம் என்றும் புள்ளி விவரங்கள் மூலம் அறியவந்துள்ளது.

குறிப்பாக கூறுவதாயின், கல்முனைத் தேர்தல் தொகுதியின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் 21, 201 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன என்று கணக்கிடப்பட்டு உள்ளது.

போரின் கோர வடுக்களால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு ஆழிப்பேரலை ஏற்படுத்திய துயரம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைந்தது.

ஆழிப்பேரலை பேரிடரின் தாக்கம் இன,மத, வயது வித்தியாசமின்றி பத்து ஆண்டுகள் கழிந்தும், பாதிப்புற்றவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆழிப்பேரலைத் தாக்கத்தின் பின்னரான காலகட்டத்தில், வடக்கு, கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான உளவள ஆலோசனைகளை வழங்குவதற்கான மருத்துவர்களோ, வளவாளர்களோ இருக்கவில்லை. தற்போது அந்த நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என நோக்கும்போது தரவுகள் நேர்மறையானவையாகவே காணப்படுகின்றன.

ஆழிப்பேரலையினால் தமது பெற்றோர்களில் ஒருவரை இழந்திருந்த சுமார் 4,000 சிறுவர்களதும், பெற்றோர்கள் இருவரையுமே காவுகொடுத்த சுமார் 1,000 சிறுவர்களதும் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது எதிர்கால நலன்களுக்கு மிகவும் முக்கியமானது. அவர்களில் அனேகமானவர்கள் தற்போது பதின்ம வயதைக் கடந்திருப்பர்.

ஆழிப்பேரழிவின் பின்னர் உலகெங்கிலுமுள்ள மனிதநேயங்கொண்ட மக்களாலும் – அரசுகளாலும் – அமைப்புக்களாலும் வழங்கப்பட்ட நிவாரணங்களைக் கொண்டு உள்ளக இடப்பெயர்வுக்குள்ளான ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்களது மேம்பாடு தொடர்பில் அரசதரப்பினராலும் அரச சார்பற்ற தரப்பினராலும் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

அவை நிறைவேற்றப்பட்டனவா? என்பதை அறிந்து கொள்வதற்கு ஆழிப்பேரலை அழிவுகள் குறித்த பரந்துபட்ட ஆய்வொன்றை நடத்துவது முக்கியமானதாகும். ஆழிப்பேரலை காரணமாக ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளை இழந்தனர். ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர் எனத் தரவுகள்தெரிவிக்கின்றன. அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்கப்பெற்றனவா?

கௌரவத்துடன் கூடிய வாழ்க்கையை நடத்துவதற்கான வழிகள், வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டனவா? இவை குறித்த தகவல்கள், தரவுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதுபோன்ற அனைத்துப் பிரச்சினைகளையும் இதர விடயங்களையும் முழுவதுமாக கண்டறிவதற்கும், தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், எதிர்காலம் தொடர்பான திட்டமிடலுக்கும் ஆழிப்பேரலை தொடர்பில் முறையான – விரிவான மீளாய்வு செய்யப்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

# தமிழர்களைப் புறமொதுக்கிய ஜனாதிபதி வேட்பாளர்கள்

மூனாத்தானா

இலங்கையில் இடம்பெறப்போகின்ற ஏழாவது ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுகின்ற ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவும், எதிரணியின் பொதுவேட்பாளராகப் போட்டியிடுகின்ற மைத்திரிபால சிறிசேனவும் தங்களால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பாக எதுவுமே கூறவில்லை.

இந்த நாட்டில் 65 வருடகாலமாகப் புரையோடிப் போயுள்ளதும், பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர் இழப்புக்களுக்குக் காரணமாக அமைந்ததுமான தேசியப் பிரச்சினை சம்பந்தமாக இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒரு சிறு வரிதானும் பதிவு செய்யாதது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது எதிர்காலத்தில் இல்லை, தமிழர்களுக்கு அது எட்டாக்கனியாகவே இருக்கும் என்பதையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

முக்கிய இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே. தமிழர் பிரச்சினைகள் என்ன என்பதை நன்கு அறிந்து கொண்டவர்கள். தமிழ்பேசும் மக்கள் பற்றிய விடயங்கள் உள்நாட்டிலும் – சர்வதேசத்திலும் பேசப்படுபவையாக மாறிவிட்டன.

தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதிலேயே சிறுபான்மைச் சமூகங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழ்மக்கள் மீதான அடிப்படை உரிமைகளை வெளிப்படுத்துகின்ற நம்பகத்தன்மை தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை. இந்தத் தேர்தலில் சிங்கள மக்களால் மட்டுமே மஹிந்த ராஜபக்ஷவோ, மைத்திரிபால சிறிசேனவோ தாங்கள் வெல்வதற்குரிய சந்தர்ப்பமாக பார்க்கின்றார்கள். தமிழர் தரப்பு பக்கத்தின் வாக்குகளை எதிர்பார்க்கவில்லை என்று மஹிந்த ஆட்சியிலுள்ள அமைச்சர்கள் சிலர் தென் இலங்கையில் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குளால் மஹிந்த ராஜபக்ஷ வென்றார் என்பது போரின் போது தாம் கொண்ட மகாவெற்றி என்ற இறுமாப்பின் காரணமாகவே இந்தத் தடவை மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களின் வாக்குகளை பிரமாண்டமாக எதிர்பார்க்கவில்லைப் போல் தோன்றுகின்றது. இருப்பினும் வாய்ச்சொல்லின் வீரரடி என்பது போல் அண்மையில் முல்லைத்தீவுக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு இடம்பெற்ற பரைப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது தமது அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களையும், பயங்கரவாதிகளிடமிருந்து வடக்கை மீட்டு நிம்மதியாகத் தமிழ் மக்கள் வாழ வகுத்துக் கொடுத்துள்ளேன் என்பதையே கூறினாரே தவிர, தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை இறுதிப்போர் நடைபெற்ற முல்லைத்தீவில் தமிழர்கள் முன் வைக்கவேயில்லை. எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வடபகுதிக்கு வருகை தந்து ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளை செய்யவுள்ளார். மன்னார், வவு னியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் ஜனாதிபதி மஹிந்த இறுதிப் பரப்புரைகளை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முல்லைத்தீவுக்கு வந்தபோது தமது தேர்தல் பரப்புரையில் கௌரவம் வேண்டுமா? என்று தமிழ் மக்களைப் பார்த்து வினா எழுப்பியிருக்கின்றார். வடக்கு மாகாணம் முப்பது வருடகாலமாக இருளில் இருந்தது என்பது பற்றியும், முப்பது வருடங்களில் பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளீர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். அவர் போரை முடித்து ஐந்து வருடங்கள் முடிந்த நிலையிலும் தமிழர்களுக்கான கௌரவமான தீர்வைத் தந்தாரா? அல்லது அதற்கான அடிப்படை நடவடிக்கைகளையாவது எடுத்தாரா? இல்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய தமிழ்க்கிராமமான மணலாறு, வெலிஓயாவாக மாற்றப்பட்டு சிங்கள மக்களுக்கான பிரதேசமாக உருவாக்கப்பட்டுவிட்டது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இன்னும் பல தமிழ்க் கிராமங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடைபெற்று வருகின்றன. சிங்களவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பை ஆக்கிரமித்து வாடிகள் அமைத்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். தமிழர்களின் நீண்டகால வயல் நிலங்கள் வெளிமாவட்டங்களிலிருந்து வருகின்ற சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழர்கள் துரத்தப்பட்டு வருகின்றனர். தமிழர் நிலங்கள் மஹிந்த அரசினால் திட்டமிட்டுப் பறிக்கப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட தமிழர்களின் வாழ்வாதார நிலைமையானது மேம்பாடடையாது பின்தங்கிய நிலையிலிருக்கின்றது.

வலி.வடக்கில் தமிழர்களின் வளமிகு காணிகளைப் பறித்தெடுத்து, கட்டடங்களை அழித்துவிட்டு படையினருக்கு சொந்தமாக்கிக் கொடுத்துவிட்டு தமிழர்களைப் பார்த்து கௌரவம் வேண்டுமா என மஹிந்த கேட்பது எவ்வாறு நியாயமாகும்? தமிழ்ப்பகுதிகளில் சிறுமிகள் உட்பட இளம் பெண்கள் பலர் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால் படையினர் மீது எதுவித விசாரணையும் இல்லை.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் ஏமாற்றி வருகின்ற மஹிந்த ராஜபக்ஷ இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழர்களைத் துடிதுடிக்கக் கொன்றொழித்துவிட்டு போரினது வெற்றியை 2009 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடி வருகின்றார். தேசத்தின் மகுடம் என மற்றொரு வெற்றி நிகழ்வையும் முன்னெடுத்து வருகின்றார். தமிழர்களைப் பற்றிய உணர்வுகளோ, அனுதாபமோ கொஞ்சம் கூட இல்லை. யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வந்திருந்த ஜனாதிபதி, யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர் தமிழர் பிரச்சினைகளை தான் புரிந்து வைத்துக்கொண்ட அளவுக்கு வடக்கு மாகாணசபை முதலமைச்சர் புரிந்து கொள்ளவில்லை என்று கூறியிருந்தார். மஹிந்த யாழ்ப்பாணத்துக்கு எப்போது வருகை தந்தாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும், வடக்கு மாகாண சபை நிர்வாகத்தையும், தப்பார்த்தமாக விமர்சிப்பதே அவருக்கு மட்டுமே உரிய கலையாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் எதிரணிகளின் கூட்டு வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேன இன நெருக்கடிக்குரிய தீர்வை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கவில்லை. டிசெம்பர் இரண்டாம் திகதி எதிரணி சார்பில் களமிறங்கிய ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அரசமைப்பு திருத்தத்தினூடாக தற்போதைய அரசமைப்பில் காணப்படும் நாட்டின் ஒற்றையாட்சி, பௌத்த சாசனம் மற்றும் ஏனைய மத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்து போன்றவற்றில் எந்தவித மாற்றமுமில்லை எனக் கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை சந்தித்து உரையாடவுமில்லை. மைத்திரிபால சிறிசேனவும் தமிழருக்கான பிரச்சினைகளை தட்டிக் கழிப்பதே ஜனாதிபதி தேர்தலுக்கான யுக்திகளில் ஒன்றாக இருக்கின்றது போலும். பௌத்த மேலாதிக்க சிந்தனைகளையே ஆராத்தி எடுப்பவர்கள் சிங்கள வாக்காளர்களின் அபரி மிதமான வாக்குகளை அள்ளமுடியாமல் போய் விடும் என்ற பயம் மைத்திரிக்கு உண்டு. இதை அவரும் முன்கூட்டியே உணர்ந்துள்ளார். அவருடன் எதிரணியில் உள்ள ஹெலஉறுமய மற்றும் இனவாதம் பேசுகின்ற அமைப்புக்களுடன் கைகோர்த்திருக்கின்ற நிலையில் சிறுபான்மையினம் சம்பந்தமான தீர்வுக்கு அவர்களுடனான உடன்படிக்கையிலும், ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடம் கொடுக்காமல் சாதுரியமாகத் தப்பியுள்ளார்.

# மஹிந்த எதிர் மைத்திரி:


## தமிழர்களின் நிலை என்ன?

என்.கே.அஷோக்பரன்

சிங்களவர்களே இந்த நாட்டில் பெரும்பான்மையினர். பெரும்பான்மையினரின் விருப்பின்றி யாரும் அதிகாரத்துக்கு வரமுடியாது. – கலபொட ஞானிஸ்ஸார தேரர், 1992. (பொதுபல சேனாவின் ஞானசார தேரர் அல்ல)

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் நாள். ஆளுங்கட்சி எதிர் எதிர்க்கட்சி என பொதுவாக அமையும் தேர்தல்களிலிருந்து வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல் சற்று வித்தியாசமானதாக அமையவிருக்கிறது. இது மஹிந்த ராஜபக்ஷ எதிர் ஏனையோர் என அமையப்போகிறது. இதுதான் யாருமே எதிர்பார்க்காத, எதிர்வுகூறாத





திருப்பம். மஹிந்த ராஜபக்ஷ எதிர் ரணில் விக்ரமசிங்க எனப் போட்டி அமையும், இலகுவாக வெற்றியீட்டிவிடலாம் என வழமையான தைரியத்துடனிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு வழங்கப்பட்ட அதிர்ச்சி வைத்தியம்தான் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக்கப்பட்டமை. இலங்கை அரசியல் வரலாற்றில் பிரித்தானியர்களுக்குப் பின்னர், பிரித்தாளும் தந்திரத்தை அதிகளவு கையாண்டது மஹிந்த ராஜபக்ஷவும் அவரது தரப்பினருமே. பிரதான எதிர்க்கட்சியைத் துண்டாடியது முதல், உதிரிக் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் எனப் பலவற்றை உருவாக்கி வாக்குவங்கிகளைச் சிதைத்து, பணம், பதவிகள் வழங்குவதன் மூலம் எதிர்க்கட்சிகளை உடைத்து தமது அதிகாரத்திற்கு போட்டி ஏற்படாதவாறு அதிகார அரசியலை முன்னெடுத்து வரும் அரசியல் கலாசாரத்தை நாம் 2005ற்குப் பின் பரவலாகக் காணலாம். என்றும் தம்மை எதிர்க்கவல்லதோர் பலமான சக்தி உருவாக முடியாதவாறு சகல அரச வளங்களையும், அதிகாரங்களையும், தந்திரங்களையும், உபாயங்களையும் கையாண்டு கட்டப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவின் கோட்டை, மைத்திரி என்ற நபரின் வெளியேற்றத்தினால் ஆட்டம் கண்டமை யாரும் மறுக்கமுடியாத உண்மை.

இதற்குக் காரணங்கள் பல. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பது பல கட்சிகளினது கூட்டணியாக இருந்தாலும், அதன் வாக்குவங்கியின் மூலமும், முதுகெலும்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாகும். அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய இடது சாரி மற்றும் குறுங்கட்சிகளுக்கு பெரியளவிலான வாக்கு வங்கி இல்லை. மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு தலைவராக இருந்தாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அவரது முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை, காரணம் அதில் பல பலம்மிக்க தலைவர்கள் இருப்பதும், தொடர்ந்தும் சுதந்திரக்கட்சியின் முக்கிய தலைவர்களும், சுதந்திரக்கட்சியின் பாரம்பரிய வாக்கு வங்கியின் பெரும்பகுதியும் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு விசுவாசமாக இருப்பதுமாகும். மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பலம்மிக்க தூண்களுள் ஒருவர். இன்றுவரை தனது குடும்பத்தவர் யாரும் பிரதமர் ஆக்கப்படாமல், டி.எம்.ஜயரத்னவை பிரதமராக மஹிந்தராஜபக்ஷ வைத்திருப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரைத் திருப்திப்படுத்துவதே முக்கிய காரணமாகும். பலமுறை பஸில்ராஜபக்ஷ பிரதமராவார் என வதந்திகள் பரவியபோதும், அது அவ்விதம் அமையாமல் இருந்ததற்குக் காரணம், சுதந்திரக்கட்சியிலுள்ள தலைவர்களின் முக்கியத்துவமே. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதியும், பண்டாரநாயக்க குடும்பத்தின் வாரிசுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசியல் மீள் பிரவேசமும், அதன் விளைவாக மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளர் ஆனதும். அதற்கு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்ததும், ஏறத்தாழ 35 கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தமது ஆதரவை பொது வேட்பாளருக்கு நல்கியதும், மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரை நிச்சயம் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும். அதன் விளைவுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஃபைல்கள் பற்றியெல்லாம் பேசவைத்தது. ஆங்கிலத்தில் Hitting below the belt என்பார்கள், இந்த ஃபைல்கள் கதை அவ்வகையான ஒரு தாக்குதலே. மேலும் பல நூறு கோடிகள் விலைபேசி அதிருப்தியாளர்களை திருப்திப்படுத்த முயலுதலும் இந்நிலையின் தீவிரத்தை உணர்த்துகிறது. ஒருபோதும் தனது தரப்பிலுள்ள எவரும் விட்டுவிலகமாட்டார்கள் என உறுதியாக நம்பியிருந்த ஜனாதிபதிக்கு மைத்திரிபால சிறிசேனவின் வெளியேற்றமும், அவரோடு சேர்ந்தும், அதன் பின்னரும் தொடரும் வெளியேற்றங்களும் அவரை நிலைதடுமாற வைத்திருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஊடகவியலாளர் சந்திப்பு பதாகைகளில் இதுவரையும் மஹிந்த ராஜபக்ஷவின் படம் மட்டுமே காணப்பட்டது, திடீரென, மைத்திரிபாலவின் வெளியேற்றத்திற்குப்பின் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கவினதும், சிறிமாவோ பண்டாரநாயக்கவினதும் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளதை ஊடகவியலாளரொருவர் குறிப்பிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் பொதுவேட்பாளர்; மீண்டும் அன்னம்: இன்னொரு பொன்சேகா?

பொது வேட்பாளர் என்றதும், சரத் பொன்சேகாவின் நிலைதான் பலருக்கும் ஞாபகம் வந்தது. அதுவும் மீண்டும் அன்னச் சின்னத்தில் பொதுவேட்பாளர் மஹிந்தராஜபக்ஷவை எதிர்க்கிறார். ஆனால் சரத் பொன்சேகாவுக்கும், மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஒப்பிட முடியாத அரசியல் ரீதியான வேறுபாடுகள் நிறையவே உள்ளன. முதலாவதாக சரத் பொன்சேகா, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வரை ஓர் அரசியல்வாதியல்ல. மாறாக இலங்கையின் இராணுவத் தளபதி, இன்னும் குறிப்பிட்டுக் கூறின் போரை வென்ற தளபதி எனச் சொல்லப்பட்டவர். இதுவே சரத் பொன்சேகாவின் அரசியல் மூலதனம். இதனுடன் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சில சிறிய கட்சிகளின் வாக்கு வங்கியும், மஹிந்த ஆட்சிக்கும், போர் வெற்றிக்கும் எதிரான தமிழ் மக்களின் வாக்குகளுமே சரத் பொன்சேகாவுக்குக் கிட்டின. அந்தத் தேர்தல் முடிவுகள் எப்படியிருப்பினும், பெரும்பான்மையின சிங்கள மக்களின் பெரும்பான்மை விருப்பை சரத் பொன்சேகாவால் வெற்றிகொள்ள முடியவில்லை என்பது மட்டும் நிதர்சனம்.

மைத்திரிபால சிறிசேனவின் நிலைமையோ வேறுபட்டது. ரஜரட்டவின் அசைக்கமுடியாத ஆதரவு மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு. 3 தசாப்தங்களுக்கும் மேற்பட்ட அரசியலின் பலன் அது. மைத்திரிபால சிறிசேன அரசிலிருந்து வெளியேறி பொது வேட்பாளரான போது பொலன்னறுவையில் மஹிந்த ராஜபக்ஷவின் பதாகைகள் கிழித்தெறியப்பட்டதாகச் செய்திகள் பதிவாகின. அந்தளவுக்கு ரஜரட்ட பிராந்தியத்தில் மைத்திரிபாலவின் ஆதிக்கம் உண்டு. கூடவே இலங்கை சுதந்திரக் கட்சியின் ஒருபகுதியினரின் ஆதரவும் மைத்திரிபாலவிற்குரியதே. குறிப்பாக பாரம்பரிய சுதந்திரக்கட்சியின் வாக்கு வங்கி பொது வேட்பாளருக்குச் செல்லும். இதற்கு சந்திரிகாவின் ஆதரவும், மஹிந்தராஜபக்ஷ மீது அதிருப்தியுற்றிருக்கும் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் பலரினதும் ஆதரவும் முக்கிய காரணம். இதைவிட ஐக்கிய தேசியக்கட்சி மைத்திரிபாலவை ஆதரிக்கிறது. இதை ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்காளன் எப்படிப் பார்க்கப் போகிறான் என்பது பெருங் கேள்விக்குரியது. ஏனெனில் இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் பரம வைரிகள். இந்தியாவின் காங்கிரஸும், பாரதீய ஜனதாவும் போல, இங்கிலாந்தின் பழமைவாதக்கட்சியும் தொழிலாளர்கட்சியும் போல, அமெரிக்காவின் குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் போல இரு துருவங்களாக வாக்கு வங்கிகளைக் கொண்ட கட்சிகள் இவை. *(தொடரும்)*

# கருத்து

## வாசகர் திருமுகம்

### ஏன் இந்த அலைச்சல்?

*யாழ்.பெரியாஸ்பத்திரி கண் சிகிச்சை கிளினிக்கில் நடந்த சம்பவம்:–*

அங்கு முதல் தரம் செல்பவர்களுக்கு கிளினிக் புத்தகம் வாங்கி, மருத்துவர் நோயாளியைப் பார்த்த பின் அடுத்த முறை எப்போது வருவது என்பதைக் கொப்பியில் எழுதுவதில்லை. வாய் மூலம் சொல்வது மட்டும் தான். நோயின் தன்மையைப் பொறுத்து 2கிழமை, 3கிழமை மருந்து பாவித்த பின் வரும்படி சொல்வார்கள். சகல கிளினிக்குகளிலும் சனக்கூட்டம் அலை மோதியபடிதான். இந்த மழை காலத்திலும் நேரத்துடன் போய் நம்பர் எடுப்பதற்காக வயது போன நேரத்திலும், பஸ் ஏறி அங்கு போய் கால் கடுக்க கியூவில் நிற்கவேண்டும். பின்னர் வரிசைக் கிரமத்தில் கொப்பியைக் கொடுக்கவேணும். எனது கொப்பியில் திகதி எழுதப்படாமையால் தாதியுடன் கதைக்கச் சொன்னார்கள். எந்தத் தாதி என்று தெரியவில்லை. எல்லோரும் சுத்தமான வெள்ளை உடையில் இருக்கிறார்கள். ஒரு தாதிய உத்தியோகத்தரிடம் கேட்டபோது வேறொரு தாதிய உத்தியோகத்தர் வரவேண்டும் என்று கூறினார். என்ன செய்வது? பொறுமையாகக் காத்திருந்தேன். பின்னர் அவர் வந்ததும் அவரிடம் விவரத்தைச் சொன்னேன். அவர் கொப்பியைப் பார்த்த பின் ஏன் உங்கள் கொப்பியை வாங்கவில்லை என்று கேட்டார். பின்னர் முதல் வந்த திகதியைக் குறிப்பிட்டுக் காட்ட மறு பேச்சில்லாமல் எனது கொப்பியை அந்தச் சிற்றூழியர் வாங்கி வைத்தார். ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? விடிய காலையில் நம்பர் எடுத்த எனக்கு மிகவும் பிந்தித்தான் இடம் கிடைத்தது. அதுவும் எவ்வளவோ அலைச்சலின் மத்தியில். எனக்கு வாய் வல்லமை இருந்தபடியால் கதைக்க முடிந்தது. என்னைப் போன்ற எத்தனையோ கண் பார்வை குறைந்தோர் காது கேளாத வயோதிபர் பாடு என்னவென்று சொல்வது. திகதி கொப்பியில் பதியாது வாய் மூலம் வரச் சொன்ன பலபேர் என் மத்தியில் இருந்தார்கள். அவர்கள் பாடு என்னவென்று தெரியவில்லை.

இந்த நிலையால் அன்று எவ்வளவோ நேரம் பிந்தித்தான் நான் வீடு செல்ல முடிந்தது. கிளினிக் கொப்பியில் திகதியை போட்டுத் தர அங்கிருந்த தாதிய உத்தியோகத்தருக்கு முடியாமல் போய்விட்டது. இது ஆஸ்பத்திரி நிர்வாகத்தினருக்கு சமர்ப்பணம்.

*பாதிப்புக்குள்ளான*
*கண்நோயாளி, சுன்னாகம்.*

### முள்ளிப் பகுதியின் அச்சம் விலகுமா?

வடமராட்சியில் அமைந்துள்ள முள்ளிப் பகுதியில் மாலை வேளைக்குப் பின்னர் நடமாடுவது அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. கொலை, கொள்ளைச் சம்பவங்களும், சட்டவிரோதச் செயற்பாடுகளும் இந்தப் பகுதியில் இடம்பெற்று வருகின்றமையே இதற்கான காரணமாகும். ஆளரவமற்ற இந்தச் சூனியப்பிரதேசத்தை சமூகவிரோதிகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். வடமராட்சியிலிருந்து தென்மராட்சியின் பல பகுதிகளுக்கும் செல்லும் மக்கள் இந்த முள்ளிப் பகுதியைக் கடந்துசெல்கின்றனர். அந்த வேளையில் அங்கு மறைந்தவாறு காத்திருக்கும் சமூக விரோதிகள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். சற்று இருட்டானதும் மக்கள் இந்தப் பகுதியைக் கடந்து செல்வதற்கு அச்சமடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டு இந்தப் பகுதியில் வீசியெறியப்பட்டதும், எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதும் மக்களின் அச்சத்தை அதிகரித்துள்ளது. எந்த வேளையிலும் தமக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற பயம் காரணமாகப் பலர் இந்தப் பகுதியூடாகப் பயணம் செய்வதைத் தவிர்த்து வருவதையும் காண முடிகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் முள்ளிப் பகுதி, மக்கள் நடமாட்டமில்லாத வனாந்தரமாகவே மாறிவிடும். காவல் துறையினர் துரிதமாகச் செயற்பட்டு சமூக விரோதிகளை இனம் கண்டு கைது செய்து தண்டனை வாங்கிக் கொடுப்பதன் மூலமாகவே முள்ளியின் அவலம் நீங்கும்.

*கு.பாஸ்கரன், மந்திகை.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## நீலப்படையும் நீதியும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது. பொலிஸார் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் எதிர்க்கட்சியினரால் மாத்திரம் முன்வைக்கப்படவில்லை. சாமானியனாலும் இதே குற்றச்சாட்டுச் சொல்லப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணத்திலும் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.நகரின் பிரதான வீதிகளினூடாக மோட்டார் சைக்கிள் பவனி இடம்பெற்றது. வடக்கு மாகாணசபை உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதனால் இந்தப் மோட்டார் சைக்கிள்களின் பவனி நடத்தப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீலப்படையணி என்று சொல்லிக் கொள்பவர்கள் அதில் பங்கெடுத்திருந்தனர். இவர்கள் அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் படம் பொறிக்கப்பட்ட ரீசேட் மற்றும், தொப்பி என்பவற்றை அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிள்களில் நகரில் பவனி வந்தனர்.

ஒரே வரிசையில் 4 மோட்டார் சைக்கிள்கள் ஒன்றாக – சமாந்தரமாக, தலையில் ஹெல்மட் இல்லாமல், நகரின் பிரதான வீதிகளினூடாக குறிப்பாக, பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தப் பவனி வலம் வந்தது. கிட்டத்தட்ட 50 இளைஞர்கள் இவ்வாறு வலம் வந்தார்கள். அவர்களில் சிலர் கையில் ஹெல்மட் வைத்திருந்தனர்.

தேர்தல் காலத்தில் தேர்தல் விதிமுறை மீறல்கள் இடம்பெறுவது வழமை. அதிலும் இலங்கையில், ஆளுங்கட்சியினர் தேர்தல் விதிமுறை மீறல்களில் தாராளமாக ஈடுபடுவார்கள். அவர்களை யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். அந்தளவுக்கு சுதந்திரம் ஆளும் தரப்பினருக்கு இருக்கின்றது.

ஆனால் நாட்டின் சாதாரண சட்டங்கள் கூட தேர்தல் வந்தால் வளைந்து கொடுக்கின்றனவா என்று எண்ணத் தோன்றுகின்றது. அதுவும் ஆளுங்கட்சியினருக்கு என்றதும், சட்டம் நாட்டில் இருக்கின்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

சாதாரணமாக வீதியில் பயணிக்கின்றபோது ஹெல்மட் அணியாமல் சென்றால், பொலிஸாரிடம் மாட்டாமல் விட முடியாது. கையில் ஹெல்மட்டை வைத்துக் கொண்டு அவ்வாறு சென்றால் சொல்ல வேண்டுமா? அதனை விட சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்றாலே தடுத்து நிறுத்தும் பொலிஸார், மோட்டார் சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்றால் விடுவார்களா ?

யாழ்ப்பாண பொலிஸார், போக்குவரத்து விதிகளை இறுக்கமாகப் பார்ப்பார்கள். சற்றுப் பிசகினாலும் அவ்வளவுதான். யாழ்ப்பாண பொலிஸார், தமது பொக்கற்றை நிறைப்பதற்காகவே இந்த இறுக்கமான போக்குவரத்து நடைமுறையைப் பார்ப்பார்கள். ஒரு தடவை நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாற்றுகையில், யாழ்ப்பாண பொலிஸார்தான் அதிகளவு லஞ்சம் வாங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அந்தளவு சீரும் சிறப்புமாக தங்கள் கடமையை (?) செய்யும் யாழ்ப்பாண பொலிஸார், தமது பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவே நீலப்படையணியினர் இவ்வாறு போக்குவரத்து விதிகளை மீறும் போது பார்த்துக் கொண்டிருப்பார்களா ?

சிலவேளை பெரிய இடம் என்பதால், அவர்களிடம் 'பல்காக' லஞ்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதால்தான் வீதியில் வைத்து அவர்களைப் பிடிக்காமல் விட்டார்களோ தெரியாது. சட்டம் ஒழுங்கின் லட்சணமும் அதை நடைமுறைப்படுத்துபவர்களின் லட்சணமும், எதிர்க்கட்சிகள் சொல்லி மக்களுக்குத் தெரிய வேண்டியதில்லை.

இவ்வாறு ஆளுங்கட்சியினர் சிலவற்றைச் செய்தாலே போதும். மக்கள் விளங்கிக் கொள்வார்கள்.

**பத்தி எழுத்து**

# சிறுவர்



## சாரதியான ஐன்ஸ்டீன்

புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றிக் கொண்டுவந்தார். அன்று அவருக்கு மிகவும் அலுப்பாக இருந்தது. ஆனால், அன்றைய தினமும் சொற்பொழிவாற்றச் செல்ல வேண் டும். என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

'சேர், கிளம்பலாமா?' என்று கேட்டுக்கொண்டே கார்ச் சாரதி அங்கே வந்தார். அப்போது ஐன்ஸ்டீனுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'இன்று போகின்ற இடத்தில என்னை இதுவரை யாரும் பார்த்ததில்லை. அதனால நீதான் இன்று ஐன்ஸ்டீன். நான் கார்ச்சாரதி;' என்று சொன் னார். சாரதிக்கு ஒன்றுமே புரியவில்லை. 'சேர், நான் எப்படி நீங்களாக முடியும்? உங்கள் அறிவு எங்கே, என் அறிவு எங்கே?' என்றார். 'ஒன்றும் பிரச்சினை இல்ல. நானும் அங்கேதான் இருப்பேன். சமாளித்துக்கொள்ளலாம்' என்றார் ஐன்ஸ் டீன். அரங்கத் துக்குள் இருவரும் நுழைந்தார்கள்.

சாரதி மேடையில் அமர்ந்தார். ஐன்ஸ்டீன் கூட்டத்துக் குள் அமர்ந்திருந்தார். ஐன்ஸ்டீன் கோட்பாடுகளைப் பற்றிப் பல்வேறு விவாதங்கள் நடைபெற்றன. இறுதி யில் ஐன்ஸ் டீனாக அமர்ந்திருந்த சாரதியிடம் ஒரு கேள்வி கேட் கப்பட்டது. உடனே சாரதி எழுந்து, 'இந்தச் சாதாரண கேள்விக்கு எனது சாரதி பதில் அளிப்பார்' என்று கூறிவிட்டு அமர்ந்தார். கூட்டத்தில் சாரதியாக அமர்ந்திருந்த ஐன்ஸ் டீன், விளக்கம் அளித்தார். பிறகு உண்மையைச் சொன் னார். 'எனக்குக் கிடைத்தது போல ஒரு வாய்ப்பு எனது சாரதிக்கு கிடைத்திருந்தால் அவரும் ஒரு விஞ்ஞானி ஆகியிருப்பார். கொஞ்சம் கூடப் பதற்றம் இல்லாமல், எவ்வளவு அழகாக எனது சாரதி பதிலளித்துள்ளார். அவர் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார்' என்று பாராட் டினார்.



குரும்பசிட்டி
அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம்
வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2014
அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்கலகரமான ஜய வருடம் மார்கழித்திங்கள் 12ஆம் நாள் இன்று (27.12.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் (துவ யாரோகணம்) ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் மகோற்சவம் நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. தொடர்ந்து 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து 05.01.2015 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
இறுதியில் 07.01.2015 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து வைரவ சாந்தியும் நடைபெறும்.
பால், தயிர், இளநீர், பூ, பூமாலை போன்றவற்றை ஆலயத்தில் கொடுத்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

பிரகாஸ் ரான்ஸ்போட்,
A.குலசிங்கம்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பொது அறிவித்தல் -2015

1. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2015
2015ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2015ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற் கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

2. வியாபார அனுமதிப்பத்திரம் - 2015
இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருள்களை விநி யோகிப்போர் 2015ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை 2015ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2015ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2015ஆம் திகதிக்கு முன் னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

3. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 பிரகாரமான அறிவித்தல்
3.1 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்ட டங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/ திருத்த வேலைகள் செய்தல் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியத் தருகின்றேன்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டடவிண்ணப்பத்தின் மூலம் விண் ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அனுமதியின்றி கட்டப்படும் கட்ட டங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாமலும் முன்னறிவித்தல் வழங்கப்படாமலும் சபையி னால் அகற்றப்படும்.
3.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3.3 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3.4 எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து தர வீதிகளின் இரு மருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச் சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூமரக் கன்றுகள், புல்பூண்டுகள், பார்த்தீனியம் மற்றும் அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றித் துப்பரவு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தவறின் சபையினரால் அகற்றப்படும் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

4. துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமம் பெறல்
2015ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

5. சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல்
1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதி காரங்களின்படி 2015ஆம் ஆண்டிலிருந்து ஆதனவரி அறவீட்டு வீதம் வருடாந்த பெறுமதியின் 15% ஆக அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2015ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங் கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2015ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு 'வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங் களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற் கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

6. சூழல் பாதுகாப்பு உரிமம்
மத்திய சுற்றாடல் அதிகார சபையின். 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித் தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடாத்துகின்ற உரிமை யாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2015ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமான அறிவித்தல்களை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

7. வீதி ஒழுங்கைப் பேணுதல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நகர மையப்பகுதியில் அதிகரித்த வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

8. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்
இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்ட ணத்தை 31.01.2015ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2015ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

9. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதி யின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய் யப்பட்டுள்ளன. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

## ஆக்கம்

# திருவெம்பாவை




ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம் தோழி பர்சேலோர் எம்பாவாய்!

### பொருள் விளக்கம்:

ஒளி மிகுந்த அழகான வாள் போன்ற கண்களையுடைய பெண்ணே! தொடக்கமும் முடிவும் இல்லாத சிவபெருமானின் பெருமையை நாங்கள் பாடிக்கொண்டு வருகின்றோம். உன்னுடைய காதுகள் வன்செவியோ? நாம் பாடும் பாட்டு உனக்குக் கேட்கவில்லையா? தேவாதி தேவனான சிவபெருமானுடைய கழல் அணிந்த திருப்பாதங்களை புகழ்ந்து வாழ்த்திப்பாடுகின்ற சத்தம் வீதியெங்கும் நிறைந்து கேட்கின்றதே! இதைக் கேட்டதும் ஒரு தோழி பக்தி மேலீட்டால் விம்மி விம்மி மெய்மறந்து நிற்கின்றாள். அவள் மலர்ப் படுக்கையிலிருந்து புரண்டுகீழே விழுந்து விட்டாள். எதற்கும் பயப்படா தவள் போலப் புரண்டு, தனைமறந்து நினைவற்றுக் கிடக்கின்றாள். அவளுடைய அன்புக்கு நிகரில்லை. அவளுடைய அன்புதான் இறைவனிடம் உண்மையான பக்தியாகும்.

எங்கள் தோழியாகிய நீயோ நித்திரை கொள்கின்றாயே! என்னே உன் தன்மை! இது முறையோ என்பதாம்.



# தண்ணீரைத் தரும் நட்சத்திரம்

வாழ்வுக்கு ஆதாரமான தண்ணீரைப் பல கிரகங்களிலும் விஞ்ஞானிகள் தேடி வருகின்றனர். இந்தத் தேடுதலில் புதிதாகக் கண்டுபிடித்துள்ள நட்சத்திரம் ஒன்றிலிருந்து கற்பனைக் கெட்டாத அளவில் தண்ணீர் பீய்ச்சி அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டுள்ளனர்.

உலகில் உள்ள மிகப் பெரிய ஆறுகளில் ஒன்று அமேசான் . இந்த ஆற்றை, இந்த நட்சத்திரத்திலிருந்து ஒரு விநாடியில் பீய்ச்சி அடிக்கப்படும் நீர் நிறைத்து விடுமாம். அந்த அளவுக்கு அந்த நட்சத்திரத்தில் நீர் உற்பத்தியாகிக் கொண்டு இருக்கிறது என்கின்றனர் ஐரோப் பிய விண்வெளி ஆய்வு நிறுவன விஞ்ஞானிகள்.

### குழந்தை நட்சத்திரம்

பூமியிலிருந்து 750 ஒளி வருடத்துக்கு அப்பால் உள்ளது இந்த நட்சத்திரம். இதன் வயது ஒரு லட்சம் ஆண்டுகள்தான். அளவில் சூரியனைப் போன்று உள்ள இந்த நட்சத்திரம் இப்போதுதான் உருவாகிக் கொண்டுள்ளது.

இந்த நட்சத்திரம் பெர்சூயஸ் நட்சத்திர மண்டலம் என சொல்லப்படுகிற (constellation perseus) இடத்திலிருக்கிறது. அதிலிருந்து அண்டவெளியில் நீர் பீய்ச்சி அடித்துக்கொண்டிருக்கிறது. மணிக்கு ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர்கள் வேகத்தில் இந்த நீர் பாய்கிறது என்கின்றனர்.

இந்த நட்சத்திரத்தில் ஹைட்ரஜன், ஒக்ஸிஜன் அணுக்கள் சேர்ந்து தண்ணீர் அணுக்களை உருவாக்குகின்றன. ஆனால், நட்சத்திரத்தில் நிலவும் பயங்கர வெப்பத்தால் அவை 1.8 லட்சம் ஃபாரன்ஹைட் அளவுக்குச் சூடாகி வாயுவாக மாறுகின்றன. நட்சத்திரத்திலிருந்து இந்த வாயு அதி வேகத்தில் வெளியேறுகிறது.

### சூரியனின் கொடையா?

நட்சத்திரத்துக்கு வெளியில் அண்டவெளியில் நிலவும் மிகக் குளுமையான சூழலால் இந்த வாயு மீண்டும் நீராக மாறி, அந்த நீர் அண்டவெளியில் பல கோடி கி.மீ. தூரத்துக்குப் பீய்ச்சி அடிக்கப்படு கிறது என்கின்றனர் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின்ஹெர்ஸ்செல்ஸ்பேஸ் ஒப்சவேட்டரி (Herschel Space Observatory) எனும் வானியல் தொலைநோக்கியை இயக்கி வரும் நெதர்லாந்து நாட்டின் லெய்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

உயிர்கள் உருவாகவும், உயிர்கள் நிலைக்கவும் மிக முக்கிய காரணியாக நீர் இருக்கிறது. அது பூமிக்கு எப்படி வந்தது என்பது குறித்துப் பல கருத்துகள் உள்ளன. பூமிக்கு சூரியனிலிருந்து நீர் வந்திருக்கலாம் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்கின்றனர். இந்த நட்சத்திரத்தில் நீர் உருவாவது அவர்களின் கருத்தை வலுப்படுத்தியுள்ளது.

## வணிகம்

# ஆஸ்திரேலியாவில் இலங்கையருக்கு கேற்வேயின் புதிய வீசாக்கள் அறிமுகம்

மெல்பேர்னைத் தளமாகக் கொண்டுள்ள இலங்கையின் முன்னணி ஆஸ்திரேலிய குடிவரவு ஆலோசகர்களான – அவுஸ்திரேலியா கேற்வே – ஃபெயார்ஃபீல்ட் சட்டத்தரணிகள் அமைப்பு அவுஸ்திரேலியக் கண்டத்தில் சுமுகமான குடிவரவு வீசா திட்டத்தினூடாக முதலீடு, வர்த்தகம், மற்றும் குடிவரவு வாய்ப்புகளைத் தீவிரமாக ஊக்குவிக்கும் துறையில் பிரவேசித்துள்ளது.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆஸ்திரேலிய வர்த்தக புத்தாக்க, முதலீட்டு வீசா முறைமை ஆஸ்திரேலியாவில் முதலீடு செய்வதற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் மற்றும் ஆஸ்திரேலிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதற்கும் உத்தேசித்துள்ள வர்த்தக புத்தாக்கத்தினரையும் முதலீட்டாளர்களையும் வெற்றிகரமாக உள்வாங்குகிறது. இந்தத் திட்டம் இலங்கைத் தொழில்வாண்மையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் போதியளவு வாய்ப்புகளை வழங்குவதாக மெல்பேர்னில் பணிபுரியும் இலங்கையி;ன் முன்னணி குடிவரவு சட்ட ஆலோசகரான சுசந்த கட்டுகம்பல தெரிவிக்கின்றார்.

இந்த வீசா முறைமையானது மூன்று ஆரம்பப் பிரிவுகளைக்கொண்டது, அதாவது வெற்றிகரமாக வர்த்தகத் தொழிலை நடத்துவதுடன் தூய்மையானதும், யதார்த்தமானதுமான அர்ப்பணிப்புடன் புதிய ஒரு உரிமையாளராகவும், ஆஸ்திரேலியாவில் தற்போது வர்த்தக்கத்தில் ஈடுபடுபவர்களுக்குமான வர்த்தகப் புத்தாக்கப் பிரிவு, ஆஸ்திரேலியாவின் பிராந்தியங்களில் உண்மையான அர்ப்பணிப்புடன் வெற்றிகரமான முதலீட்டை மேற்கொண்டு வர்த்தகத்தில் வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றவர்களுக்காக முதலீட்டாளர் பிரிவு, ஆஸ்திரேலியாவில் குறைந்தது ஐந்து மில்லியன் ஆஸ்திரேலியன் டொலர்களை முதலீடு செய்ய விரும்புவோர்களுக்கு கணிசமான முதலீட்டாளர் பிரிவு என்றும் வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

புத்தாக்க வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும் வர்த்தகர்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் நிரந்தர வதிவிடத்தை அடைவதற்கான வழிகளையும் வர்த்தக புத்தாக்க மற்றும் முதலீட்டுத் திட்டம் இலகுபடுத்துகிறது. வர்த்தக புத்தாக்கப் பிரிவு வீசாவுக்கான தகைமைகளை பூர்த்தி செய்ததன் மூலம் தற்காலிக வீசாவை பெற்றுக்கொண்டுள்ளவர்கள் மாநில அரசாலோ அல்லது சமஸ்தான அரசாலோ பிரேரிக்கப்படும் பட்சத்தில் மேலும் ஈராண்டுகளுக்கு வீசாவை நீடிப்பதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்வோரின் அதிகரித்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக பெயார்.பீல்ட் சட்டத்தரணிகள் 2005 ஆம் ஆண்டு இலங்கையில் அவுஸ்திரேலியா கேற்வே அலுவலகமொன்றை ஸ்தாபித்தனர்.

அது ஜெய்க் ஹில்டன் கோபுரத்தில் இயங்குகிறது. தொழில் திறனுடையவர்களும் வர்த்தகர்களும் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வதற்கான நம்பகமான சேவைகளை திறமையான சட்டவல்லுநர்கள் மூலமாக உதவி வருகிறது. (த)



# செய்தி

## நத்தார் இசை விருந்து நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் "திருமகனே தாலேலோ" எனும் நத்தார் இசை விருந்து நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெற உள்ளது என திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளர் சீ.எம். நெல்சன் அறிவித்திருக்கிறார்.

யாழ். மரியன்னை பேராலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், யாழ். இரட்சணிய சேனையைச் சேர்ந்தவர்கள் இந்த இசை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவர். யாழ். திருமறைக் கலாமன்ற மாணவர்களின் கரோல் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-51)


உ
சிவமயம்

**யாழ். பூநாறிமரத்தடி "செல்வமஹால்"**
மண்டபத்தில் "ஞானரத்தின"
விரதமஞ்சரி காணொளி பைரவகீதங்கள்
இறுவட்டு
அறிமுக விழாவும் , இசை நிகழ்வும்
காலம் : நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை
மாலை : 05.00 மணிமுதல் 06.30 மணிவரை
**தலைவர்**
**ந.விஜயசுந்தரம்** அவர்கள்
(பிரதம ஆசிரியர் - வலம்புரி)
**பிரதம அதிதி**
வணக்கத்திற்குரிய
**ஸ்ரீ.ஸ்ரீமதி.தாணு.மகாதேவக்குருக்கள்** தம்பதிகள்
(தர்மசாஸ்தாகுருகுலம் இணுவில்)
**சிறப்பு அதிதி**
சிரேஷ்ட பேராசிரியர், கலாநிதி
**என். சண்முகலிங்கன்**
(முன்னாள் துணைவேந்தர்,
தலைவர்-சமூகவியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**கௌரவ விருந்தினர்கள்**
**கலாபூஷணம் எஸ். ராதாகிருஷ்ணன்**
(வயலின் வித்துவான்)
**க.கைலநாதன்**
(கிளி.பூநகரி மத்திய கல்லூரி - ஆசிரியர்)
**இசையமுதம்**
**சிவஸ்ரீ. சோம உமாரமணக்குருக்கள்**
அவர்களின் நல்லாசிகளுடனும்
**கலாவித்தகர் ந.செல்வச்சந்திரனின்**
பின்னணி இசையில்
**சப்தமி ஒலியமைப்பில்**
**தமிழ்நாடு திருமதி ஸ்.டிலாணி**
அவர்களின் மாணவன்
**செல்வன் ச.ஷைலேந்திரசர்மா**
(மலேசியா)
முதற்பிரதிபெறும் விருந்தினர்
**திரு. திருமதி ச.சுகந்தன் தம்பதியினர்**
பைரவப்பெருமானின் புகழ்பாடும் இறுவட்டினையும் விரதங்கள் பற்றியதான வீடியோ காணொளியினையும் பெற்று இசையமுதத்தினை ரசித்தும் விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நல்வரவை நாடும்
"ஞானரத்தினம்"
ஸ்ரீ.ஸ்ரீமதி.ஞா.சபாரத்தினசர்மா குடும்பத்தினர்.
சித்தன்கேணி.
(55266)
(45.3.7)

**2015 Chemistry Personal Classes**
Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 6038913

**தேவை**
கடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள்தேவை. (ஆண், பெண்)
இருபாலாரும் - வயது 18-30 வரை.
917, K.K.S.வீதி, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (55281) (45.3.7)

**விற்பனைக்கு**
4வயது நிரம்பிய அல்ஸ்ரேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 750 3752 (55257) (45.3.7)

**காணிதேவை**
யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை எல்லைக்குள் விரும்பத்தக்கது) காணிதேவை.
தொடர்பு: 077 004 8439 (55272) (45.3.7)

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்
இப்பொழுது காண்பிக்கப்படும்
ஆர்யா, ஹன்சிகா நடிப்பில்
25முதல்
**மீகாமன்**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
AC / DTS
தைப்பொங்கல் வெளியீடு
விக்ரம் நடிப்பில் ஐ


**நீரிழிவு நோய்**
கருத்தரங்கும் வைத்திய ஆலோசனையும்
யாழ். வண் மேற்கு வைத்தியசாலை
(Dr. கெங்காதரன் வைத்தியசாலை)
நீரிழிவு நோய்க்கான காரணங்களை விளக்கமான படங்களுடன் ஆலோசனையை வழங்க வருகின்றார் நீரிழிவு சம்பந்தமான வைத்திய அதிகாரி (யாழ்.போதனா வைத்தியசாலை)
* நடைபெறும் இக்கருத்தரங்கில் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வாருங்கள்.
* விரும்பியவர்கள் வைத்திய சேவையையும் பெற்றுக் கொள்ளலாம்.
* வைத்திய சேவையைப் பெறுபவர்களுக்கு மருந்துகள் இலவசம்

**திகதி: 28.12.2014 நேரம் காலை 9 AM**
வண் மேற்கு வைத்தியசாலை,
60, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம். (55285)(4.3.6)
நிர்வாகம்.

**தென்கோவை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்**
**இருபாலை விநாயகர் சஷ்டி உற்சவம்**
தென்கோவை, இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய விநாயகர் சஷ்டி உற்சவமானது இன்று 27.12.2014 பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலஸ்தான பூஜை, விசேட வசந்த மண்டபப்பூஜை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று பஞ்சமுக விநாயகர் திருவீதியுலாவரும் கண்கொள்ளாக்காட்சியும் இடம்பெறும்.
**விசேட நிகழ்வாக**
ஆலய ஆஸ்தான வித்துவான் ஈழநல்லூர் தர்சன் அவர்களுடன்
ஈழ நல்லூர் P.S.பாலமுருகன் குழுவினர்
கோண்டாவிலூர் பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர்
வழக்கம்பரையூர் சிவகுமார் குழுவினர்
தாவடியூர் நாகதீபன்
ஆகியோருடன் இணைந்து ஈழ நல்லூர் P.S.பாலமுருகனின் புதல்வன் P.சாரங்கன் அவர்களின் தவில் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.
(55283) (4.6.3) விநாயகர் சஷ்டி விரத உபயகாரர்.
CM K

**G.C.E O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கற்கைநெறிகள் யாவும் January 2015 ஆரம்பம்.**

**Craft Certificate Courses**
தமிழ்மொழி மூலம் - 6 மாதங்கள் - முழுநேரம்
Hostel, Library & Sports Facilities available
- Electrical Wiring - மின்இணைப்பும் நிர்மாணமும்
- Refrigeration & Air-Conditioning Mechanic- குளிரூட்டுதல் பயிற்சிநெறி
- Machineshop Practice - லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி
- Radio,TV & Electronic Servicing Technology - இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
- Aluminum Fitting & Fabrication- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்
- Motor cycle and Light engine Mechanism- மோட்டார் வாகனம் திருத்துதல்

**Computer Certificate Courses**
(3 Months Part time)
- Microsoft Office
- Computer Graphic Designer
- Internet & E-mail
- AutoCAD 2D & 3D Modeling

NVQ LEVEL (6 months)
Computer Application Assistant (CAA)
தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை முறைமைக்கு அமைவான பயிற்சிநெறி (NVQ Level)

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் :P25/0014
*For More Information:*
Director,
Jaffna College Institute of Technology Vaddukoddai,
Jaffna, Sri Lanka. Tel : 0212250975
(சி.18795)


**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
TP: 021 222 2573
2015
விசேட விலைக்கழிவு
* அப்பியாசக் கொப்பிகள்
* கலண்டர்கள், டயறிகள்
* பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள்
* பாடசாலை, அலுவலக உபகரணங்கள்
தரம் 6 விஞ்ஞானம்
(2015ஆம் ஆண்டின் பாடத்திட்டத்திற்கு அமைவானது) விற்பனையாகின்றது,
விலைக் கழிவில்........
2 கட்டு - 22/=
3 கட்டு - 29/=
4 கட்டு - 38/=
5 கட்டு - 46.50
அட்லஸ் அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
ஞாயிற்றுக்கிழமையிலும் திறக்கப்படும்


நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும்
**10%விலைக்கழிவு**
**Style Park**
Perfect Collection

நவ நாகரிக நவீன மய ஆடைகள், புத்தம் புதிய சாறி வகைகள்,
நங்கையருக்கேற்ற ஜவுளிகள், சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற
அதி சிறந்த ஆடைகளை விரும்பிய டிசைன்களில் பெற்றிட நாடவேண்டிய இடம்...
யாழ். மண்ணில் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்
171, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 8383

# உலகச் செய்திகள்

# பயங்கரவாதிகளை ஒழிக்க இணைந்த நடவடிக்கை

## காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்து

புதுடில்லி, டிசெ. 27
பயங்கரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

உலகம் முழுவதும் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்துள்ளன. சமீபத்தில் பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவப் பாடசாலையில் 140க்கும் அதிகமான மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது உலக அமைதிக்கு பங்கம்விளைவிக்கும் செயலாகும்.

அசாம் மாநிலத்தில் போடோ தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 76க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் சாவடைந்துள்ளனர்.

தமிழக எல்லையில் பாலக்காடு, வயநாடுபகுதிகளில்உள்ளகேரள வனத்துறை அலுவலகங்கள்மீது மாவோயிஸ்ட்டுகள் திடீர் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். அதனால், இரு மாநிலங்களிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தீவிரவாதிகள் நடத்தும் மனித நேயமற்ற தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். எந்தச் சூழலிலும் தீவிரவாதத்தை அனுமதிக்கக் கூடாது. உலக நாடுகள் ஒருங்கிணைந்து தீவிரவாதச் செயற்பாடுகளை எதிர்த்துப் போராட வேண்டும்.ஆட்சியில் எவர் இருந்தாலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்காமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது அரசின் கடமையாகும் என்று தெரிவித்தார். (ஒ–ரி)



## ஜார்க்கண்டின் புதிய முதல்வராக ரகுவர் தாஸ்

ராஞ்சி, டிசெ. 27
ஜார்க்கண்டின்புதிய முதல்வராக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான ரகுவர் தாஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் நடைபெற்ற கூட்டத்திற்குப்பிறகு ரகுவர் தாஸ் முதல்வராக தெரிவுசெய்யப்பட்டமை குறித்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியானது. அவர் ஜார்க்கண்டில் முதல்வராக பதவியேற்கவிருக்கும் பழங்குடியினத்தவர் அல்லாத முதல் அரசியல் தலைவர் என்ற பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

## அகதிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் அமெரிக்கா

சிரியா அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உள்நாட்டுப் போர் நடைபெறும் சிரியாவில் இருந்து வெளியேறுவோரில் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேரை அகதிகளாக ஏற்க அமெரிக்கா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் அகதிகளுக்கான இணை அமைச்சர் ஆனி ரிச்சர்ட் தெரிவிக்கையில்:

அமெரிக்காவில் இந்த ஆண்டு 350 சிரியா அகதிகளுக்குத்தான் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டிலிருந்து 10 ஆயிரம் அகதிகளுக்கு அனுமதி வழங்கப்படும். அமெரிக்காவில் குடியேற விரும்பும் சிரியா அகதிகளிடம் ஜோர்டானின் அம்மான் மற்றும் துருக்கியின் இஸ்தான்புல்லில் உரிய விசாரணை நடத்தப்படும்.

அதே வேளையில் வடக்கு ஈராக்கில் குர்திஷ் பிராந்தியத்தில் இதுபோல் அமெரிக்காவில் குடியேற விரும்பும் அகதிகளிடம் விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அகதிகளில் பெரும்பாலானோர் கணவரை இழந்து குழந்தைகளுடன் இருப்பவர்கள், முதியோர் மற்றும் மருத்துவ வசதியை நாடுவோர் தான் என்று தெரிவிக்கப்படுகிறது.எனவே இவர்களால் அமெரிக்காவுக்கு எந்த ஒரு ஆபத்தும் நிகழாது எனவும் கூறியுள்ளார். (ஒ–ரி)

## கொலம்பியாவில் விமான விபத்து

### 6 பேர் சாவு

போகோடா, டிசெ.27
ஸ்பெயின் நாட்டில் சிறிய ரக பயணிகள் விமானம் ஒன்று கொலம்பியாவின் தெற்குப் பகுதியில் விபத்துக்குள்ளானது. இதில் விமானி மற்றும் விமானத்தில் பயணித்த பயணிகள் உட்பட ஆறு பேரும் சாவடைந்துள்ளனர்.

இந்த விபத்து நடைபெறுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் விமான போக்குவரத்து கண்காணிப்பகத்திடம் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருப்பதாக விமானி அறிப்பு விடுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ–ரி)

## எபோலாவுக்கு புதிய மருந்து சீனா கண்டுபிடிப்பு

பீஜிங், டிசெ.27
மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா, சியாரா லியோன் ஆகியவற்றில் 7000க்கும் மேற்பட்ட மனித உயிர்களைக்காவு கொண்ட எபோலா வைரஸ் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இந்தநிலையில்கொடிய எபோலா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கான தடுப்பு மருந்தைச் சீனா கண்டுபிடித்துள்ளது. இந்தப் புதிய தடுப்பு மருந்தை இம்மாத இறுதியில் மனிதர்களுக்குச் செலுத்தி சோதனை செய்ய உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. சீன இராணுவத்தின்தலைசிறந்தஆராய்ச்சி அலகுகளில் ஒன்றான இராணுவ மருத்துவ அறிவியல் கல்லூரியால் இந்தத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



வடக்கு சீனாவின் மொங்கோலியாவில் குளிர்கால திருவிழா நடைபெற்று வருகிறது. அந்த நிகழ்வில் பனிபடர்ந்துள்ள பிரதேசத்தில் கலைமானுடன் சவாரி செய்து ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றி வெற்றியீட்டிய போட்டியாளர்.




## கருங்கடலில் எண்ணெய்க் கசிவு ரஷ்யாவில் அவசரநிலை பிரகடனம்

மொஸ்கோ, டிசெ. 27
ரஷ்ய எல்லையில் கருங்கடல் பிராந்தியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்டநில அதிர்வினால் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு செல்லும் எண்ணெய்க்குழாய் வெடித்துச்சிதறி தாப்சி ஆற்றுக்குள் கச்சா எண்ணெய் கலந்து வருகிறது. அதனால் அந்தப்பகுதியில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தற்போது அந்த ஆற்றைச் சுத்தப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை ரஷ்யாவின் செர்னோமர் டிரான்ஸ்நெப்ட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அதனால் அந்தப் பகுதிக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.. தாப்சி ஆற்றில் ஏற்கெனவே எண்ணெய்க் கழிவுகள் கலந்துள்ளன. தற்போது எண்ணெய்க் குழாய் வெடித்துச் சிதறியதால் அதிகளவில் மாசு படர்ந்து உள்ளது. இந்தப்பிரச்சினையில் எண்ணெய் நிறுவனம் உடனடியாக செயற்பட வேண்டும் என்று உலக வனவிலங்குகள் நல நிதியம் ரஷ்யாவைக் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ–ரி)

## காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சேக்குக் கோயில்



டில்லி, டிசெ. 27
மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சேக்குக் கோயில் அமைப்பதற்காக உத்தரப் பிரதேசத்தில் பூமி பூஜை நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோட்சேக்குக் கோயில் கட்டும் பணிகளில் அகில பாரதிய இந்து மகாசபை ஈடுபட்டுள்ளது. அதன்படி, உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள சாரதா வீதியில் கோயில் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கப்பட்டு அங்கு பூமி பூஜையும் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பேசிய இந்து மகாசபையின் தேசிய பொதுச் செயலாளர் ஆச்சார்யா மதன், கோட்சே இந்தியாவின் உண்மையான தேச பக்தன் என்று தெரிவித்துள்ளார்.

காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சேக்குக் கோயில் கட்டும் பணிகள் நடந்து வருவது நாடுமுழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சங்க பரிவாரங்களின் ஆதரவு அமைப்புகளில் ஒன்றான அகில பாரதிய இந்து மகாசபையின் இந்த தேசவிரோதத் திட்டம் கடும் கண்டனத்திற்கு உரியதாகும் என்று பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)



அமெரிக்காவின் புளோரிடாவைச் சேர்ந்த பெண் ஓவியர் ஒருவர் மனிதர்களைக் கொண்டு அழகான விலங்கு வடிவங்களை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார். இந்த வடிவங்களை அமைப்பதற்காக ஒவ்வொரு மனித உடலிலும் வர்ணம் பூசுவதற்கு 6 முதல் 12 மணித்தியால நேரத்தை செலவிட்டுள்ளார்.

# அமெ. மீது கடல்வழி அணு ஆயுதத் தாக்குதலுக்கு தயாராகும் சீனா

பீஜிங், டிசெ. 27

அமெரிக்கா மீது கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைகள் மூலம் மட்டுமே தாக்குதல் நடத்தத் தயாராக இருந்த சீனா, தற்போது கடல் வழியாக அணு ஆயுதத் தாக்குதல் நடத்தத் தயாராகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமது நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து கடல் வழியாக தாக்கும் பேலிஸ்டிக் அணு ஆயுத ஏவுகணைகளைத் தயாரிப்பதில் சீனா முன்னேறியிருப்பதாக அமெரிக்க–சீனா பாதுகாப்பு மறு ஆய்வுக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைவழித் தாக்குதல் தொடுக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா சுலபமாக அடையாளம் கண்டு முதல் ஏவுதலிலேயே முறியடிக்கும் திறன் கொண்டுள்ளதால் சீனா தற்போது எளிதில் அழிக்க முடியாத கடல்வழி அணு ஆயுதத் தாக்குதலுக்கான தயாரிப்பு முயற்சியில் இறங்கியுள்ளது.

ஜே.எல்.2 ஏவுகணைகளை சீனா கடல்வழியாக தயார் நிலையில் வைக்க ஏற்பாடுகள் செய்து வருவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்த ஏவுகணைகள் 7,350 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்குதல் நடத்தக் கூடிய திறன் கொண்டவை. ஏற்கெனவே அணுத்திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை 2007 ஆம் ஆண்டில் சீனா அறிமுகம் செய்துள்ளது.

ஆனால் ஜே.எல்.2 கடலடி ஏவுகணைகள் அடி ஆழத்திலிருந்தும் கூட தாக்குதல் மேற்கொள்ளும் திறன் கொண்டவை. அமெரிக்காவின் அலாஸ்கா பகுதி சீனாவின் தாக்குதல் வட்டத்திற்கு அருகில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானுக்கு தெற்கே கடலிலிருந்து இந்த ஆயுதங்கள் மூலம் தாக்குதல் தொடுத்தால் அதற்கு ஹவாய் இலக்காகும். பசிபிக் கடற்பகுதியில் சீனாவின் சுற்றுப்புற எல்லைகளில் சுமார் 3,60,000 அமெரிக்க கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளமை சீனாவின் கவலையை அதிகரித்துள்ளது. இந்தப்பகுதியில் அமெரிக்கக் கடற்படையின் 200 கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புதிய கடல்வழி அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சியினால் அமெரிக்காவின் அணு ஆயுதத் தாக்குதல்களிலிருந்து சீனா தன்னை முழுமையாக தற்காத்துக் கொண்டுள்ளதாக அந்த நாட்டு நிபுணர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)

## வர்த்தகச் சலுகைகளுக்கான ஒப்பந்தம் காம்பியாவை நீக்கியது அமெரிக்கா

வொஷிங்டன், டிசெ. 27

ஆபிரிக்க நாடுகளுக்கு வர்த்தகச் சலுகை அளிக்கும் ஒப்பந்தத்திலிருந்து காம்பியாவை அமெரிக்கா நீக்கியுள்ளது.

அமெரிக்காவின் ஆபிரிக்க வளர்ச்சி, வாய்ப்புச் சட்டத்தின் கீழ் பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்கு வர்த்தகச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இதற்கான ஒப்பந்தத்திலிருந்து மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியாவை நீக்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. எனினும், அதற்கான காரணம் எதுவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை.

காம்பியா அதிபர் யாஹ்யா ஜம்மே சர்வாதிகார ஆட்சி நடத்துவதாகவும், அந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகவும் குற்றம் சுமத்தப்படுவதே அமெரிக்காவின் இந்த முடிவுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

# பின்லேடன் படுகொலை அம்பலம்

## அதிரடிப் படைவீரரிடம் விசாரணை

வொஷிங்டன், டிசெ. 27

ஒசாமா பின்லேடன் படுகொலைச் சம்பவத்தை வெளிப்படுத்தியமைக்கான காரணம் குறித்து முன்னாள் சிறப்பு அதிரடிப் படை வீரரிடம், அமெரிக்க தேசிய குற்றப்புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்தி வருகிறது.



பாகிஸ்தானின் அபோதாபாத் என்ற இடத்தில் பதுங்கியிருந்த அல்குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன், கடந்த, 2011ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி அமெரிக்க சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தநிலையில் பின்லேடனை தாமே சுட்டுக்கொன்றதாக முன்னாள் சிறப்பு அதிரடிப் படை வீரர் ரொபர்ட் ஓநீல், கடந்தமாதம் தெரிவித்து உலகமெங்கும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஆனால் இந்தத்தகவலை வெளிப்படுத்தியது ஏன்? என அவரிடம் தற்போது அமெரிக்க தேசிய குற்றப்புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்தி வருகிறது.

இதற்கிடையே சிறப்பு அதிரடிப் படையில் சேரும் போது, வேலையின் தன்மை குறித்து எவரிடமும் தெரிவிக்க மாட்டேன் என அளித்த உறுதிமொழியை, ராப் ஓநீல் மீறிவிட்டார் என அதிரடிப் படைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)



## பாக். பயங்கரவாத வழக்குகள்; விசாரிக்க ராணுவ நீதிமன்றங்கள்

இஸ்லாமாபாத், டிசெ. 27

பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க இராணுவத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நீதிமன்றங்களில் இராணுவ அதிகாரிகளே விசாரணைகளை மேற்கொள்வர். இந்த நீதிமன்றங்கள் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளும். இந்த இராணுவ நீதிமன்றங்கள் இரண்டு ஆண்டுகளுக்குச் செயற்படும். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் நவாஸ் ஷெரீப் பயங்கரவாதிகள் புரியும் கொடிய செயல்களுக்கு இந்த நீதிமன்றங்கள் முற்றுப்புள்ளி வைக்கும் என்று கூறினார்.

இராணுவ சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பது தொடர்பாக, நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர் குர்ஷீத் ஷா கூறினார். (ஒ–ரி)

# மொகதிஸுவில் அமைதிப்படைத் தளம்மீது தாக்குதல்

சோமாலியத் தலைநகர் மொகதிஸுவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் அமைதிகாக்கும் படையின் முக்கிய படைத்தளம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.


விமான நிலையத்துக்கு அருகிலுள்ள படைத்தள வளாகத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் வெடிச் சத்தங்கள் கேட்டு வருகின்றன.

தமது போராளிகள் முகாமை ஊடறுத்து உள்ளே நுழைந்திருப்பதாக அல் ஷபாப் இஸ்லாமிய ஆயுதக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதனிடையே, படைத்தள வளாகத்திலுள்ள அதிகாரிகள், மோதல் நடந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ள அதேவேளை, முக்கிய தடுப்புச் சுவரை ஆயுததாரிகள் கடக்கவில்லை என்றும், தமது தரப்பில் உயிரிழப்புக்கள் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளனர். (ஒ–ரி)



# பல்சுவை



## கண்ணை மறைக்கும் பேஸ்புக் காதல்!

இன்றைய நவநாகரிக காலத்தில் நம் இனத்தின் கலாசாரம் கப்பல் ஏறி விட்டது. கண்டவுடன் காதல், அடுத்த நாள் கலியாணம் என்று இவ்விடயத்தில் சிந்திக்காமல் முடிவை எடுக்கின்றனர். சில வேளைகளில் அது சாதகமாக அமைந்தாலும் கூட, பெரும் விபரீதமாக மாறி அவர்களின் எதிர்காலத்துக்கே பெரும் இடியாக விழக் கூடிய சூழ்நிலைகளே தற்போது அதிகம். அதுவும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில், கட்டி வைக்கப்பட்டுள்ள நாய்தான் அதிகம் கடிக்கும் என்று முதியவர்கள் சொல்வார்கள். அதேபோல் கடந்த காலங்களில் எம் இளைஞர், யுவதிகள் கலாசாரத்துக்காகக் கட்டி வைக்கப்பட்டிருந்தனர். தற்போது அவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையிலும், ஆடம்பர வாழ்க்கையின் உச்சமும் அவர்களின் எதிர்காலத்து வாழ்க்கையைச் சிதைத்து விடுகின்றன. சின்னாபின்னமாகும் தமிழ் யுவதிகளின் வாழ்வு, தற்கொலைக்கு முயற்சிக்கும் இளைஞர்களின் பரிதாபம் என ஒரு தொடர் கதையாக மாறி வருகின்றது இன்றைய யாழ்ப்பாணம். எனவே பெற்றோர்களாகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளின் நாளாந்தச் செயற்பாடுகள் குறித்து அதீத கவனம் எடுத்தல் இன்றைய கால கட்டத்திற்கு அதி முக்கியமானதாக அமைகின்றது. அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி. தற்காலம் தவறுகள் இடம்பெறுவதற்கும், தவறான வழிக்கு இளைஞர், யுவதிகள் வழிதவறிப் போவதற்கும் ஏற்ற சூழலமைவாகக் காணப்படுகின்றது. அத்துடன் எமது சமூகத்தில் பின்னிப்பிணைந்துள்ள இணையத்தளப் பாவனை, இரவிரவாக சமூகத்தளங்களுடன் பொழுது கழிக்கும் பிள்ளைகள், இதனால் ஏற்படும் புதிய புதிய நட்புகள் இவைகள் அனைத்தும் எதிர்காலத்தில் பெற்றோர்களாகிய உங்களுக்கு பெரிதும் தாக்கத்தை உண்டுபண்ணும்.

எனவே இளவயதில் இவ்வாறு சமூகத்தளங்களினால் இடம்பெறும் தவறுகளுக்கு அப் பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றோர்களாகிய நீங்களும்தான் பொறுப்பு என்பதை நினைவில் கொண்டு, இனிவரும் காலங்களில் எமது இன இளைஞர், யுவதிகள் இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் சீரழிவதை, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாவதைத் தடுத்து நிறுத்துங்கள். அதுவே இன்றைய சூழ்நிலைக்கு அதி முக்கியமானதாக அமைகின்றது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### செய்யும் செயல்களே பலன்களை அளிக்கின்றன

நம்மிடமிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு செயலும் நம்மிடமே எதிர்ச்செயலாகத் திரும்பி வருவது போல நமது செயல்கள் பிறரிடமும் பிறரது செயல்கள் எம்மிடமும் செயற்படுகின்றன. தீங்கு செய்கின்ற ஒருவன் மேலும் மேலும் தீயவனாகிறான். அவனே நல்லது செய்யத் தொடங்கும் போது மேலும் வலிமையடைந்து எப்போதுமே நல்லதைச் செய்யக் கற்றுக் கொள்கிறான். இந்த உண்மையை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஒரு செயல் ஏற்படுத்தும் தாக்கத்தின் இத்தகைய தீவிரத்தை எமது செயல்கள் பரஸ்பரம் ஒவ்வொருவர் மீதும் விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் உண்டாக்குகின்றன என்ற உண்மையின் மூலமே விளக்க முடியும். ஒருமுறை ஒருவர் செய்த செயல் அவருக்கு அதற்கான பலனை அளிக்கும் வரையில் அதனை அழிக்க முடியாது. அது பலனளிப்பதை உலகத்தில் உள்ள எந்த ஆற்றலாலும் தடுக்க முடியாது. நாம் ஒரு தீமை செய்தால் அதற்காக நாம் துன்பப்பட்டேயாக வேண்டும். அதைத் தடுக்கவோ அழிக்கவோ இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எந்த ஆற்றலாலும் முடியாது. அதுபோலவே, நாம் ஒரு நல்ல செயல் செய்தால் அது நற்பலன்களைத் தருவதைத் தடுக்கின்ற ஆற்றலும் இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை. காரணம் எந்தச் செயலானாலும் அது விளைவுகளைக் கொண்டு வந்தே தீரும். ஆகவே எந்தச் செயலாலும் அதை அழிக்கவோ தடுக்கவோ முடியாது. உலகத்தைத் துறக்காதே, உலகத்திலேயே வாழ், அது தரும் அனுபவங்களை உன்னால் முடிந்த அளவு ஏற்றுக் கொள், ஆனால், அது உனது இன்பத்துக்காக என்றால் அவற்றை ஒரு போதும் செய்யாதே என்று கற்பிக்கிறது. அனுபவிப்பது லட்சியமாக இருக்கக் கூடாது. முதலில் நான் என்பதைக் கொன்றுவிடு. பின்னர் உலகம் முழுவதையும் நீயாக ஏற்றுக்கொள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 3 | | | | |
| 9 | | | 6 | | 4 | | | |
| | 1 | 4 | 2 | 7 | 8 | | | |
| | 5 | 6 | | | | | | 8 |
| 4 | 9 | | 8 | 6 | 1 | | 2 | 7 |
| 1 | | | | | | 9 | 3 | |
| | | | 7 | 4 | 6 | 1 | 5 | |
| | | | 5 | | 3 | | | 2 |
| | | | | 8 | | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 3 | 2 | 8 | 4 | 6 | 1 |
| 2 | 1 | 4 | 9 | 6 | 7 | 8 | 5 | 3 |
| 3 | 6 | 8 | 1 | 4 | 5 | 7 | 9 | 2 |
| 8 | 2 | 6 | 5 | 1 | 4 | 3 | 7 | 9 |
| 4 | 5 | 7 | 2 | 3 | 9 | 6 | 1 | 8 |
| 9 | 3 | 1 | 8 | 7 | 6 | 5 | 2 | 4 |
| 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 | 6 |
| 6 | 9 | 2 | 4 | 5 | 3 | 1 | 8 | 7 |
| 7 | 8 | 3 | 6 | 9 | 1 | 2 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே . வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 70 | 120 | 80 | 80 | 60 | 70 |
| கத்தரி | 200 | 200 | 240 | 200 | 220 | 220 | 200 | 180 |
| கரட் | 120 | 200 | 180 | 200 | 180 | 260 | 220 | 180 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 50 | 40 | 60 | 50 | 20 |
| பயிற்றை | 200 | 250 | 240 | 300 | 240 | 240 | 220 | 250 |
| பாகல் | 300 | 350 | 400 | 300 | 300 | 260 | 240 | 150 |
| கருணைக்கிழங்கு | 40 | 40 | 50 | 80 | 50 | 80 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 130 | 140 | 120 | 140 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 50 | 50 | 100 | 100 | 100 | 160 | 160 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 35 | 60 | 40 | 30 |
| தக்காளி | 280 | 200 | 240 | 240 | 200 | 220 | 220 | 160 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 | 100 | 70 | 140 | 100 | 80 |
| கீரை | 40 | 40 | 70 | 20 | 40 | 50 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 50 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 400 | 500 | 500 | 500 | 400 | 450 | 300 |
| புடோல் | 140 | 150 | 120 | 140 | 140 | 140 | 120 | 100 |
| கோவா | 120 | 120 | 140 | 140 | 120 | 180 | 120 | 100 |
| வெண்டி | 180 | 160 | 140 | 140 | 140 | 160 | 140 | 80 |
| போஞ்சி | 160 | 280 | 240 | 180 | 240 | 160 | 220 | 160 |
| லீக்ஸ் | 320 | 250 | 350 | 280 | 280 | 320 | 280 | 250 |
| தேங்காய் | 30 | 50 | 38 | 40 | 40 | 40 | 45 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 90 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 60 | 120 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 400 | 300 | 240 | 320 | 260 | 280 | 400 | 280 |
| இராசவள்ளி | 120 | 160 | 140 | 200 | 140 | 160 | 140 | 120 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை |
|---|---|---|---|---|
| இறால் | 550 | 500 | 800 | 700 |
| நண்டு | 200 | 250 | 350 | 250 |
| கணவாய் | 400 | 550 | 400 | 500 |
| பாரை | 350 | 500 | 400 | 320 |
| சுறா | 500 | 550 | 480 | 500 |
| சீலா | 220 | 400 | 350 | 400 |
| விளை | 350 | 450 | 400 | 350 |
| முரல் | 150 | 300 | 320 | 200 |
| கும்பிளா | 300 | 300 | 320 | 300 |
| கிழாக்கன் | 150 | 500 | 400 | 400 |
| ஒரா | 220 | 300 | 190 | 300 |
| திரளி | 130 | 250 | 200 | 200 |
| நகரை | 130 | 250 | 270 | 200 |
| சூடை | 80 | 100 | 90 | 150 |
| திருக்கை | 90 | 120 | 100 | 80 |

## நாளை

**மார்கழி-13 ஞாயிற்றுக்கிழமை**
**28.12.2014**

திதி: ஸப்தமி மா.05.24 வரை
நட்சத்திரம்:பூரட்டாதி பி.ப.12.09 வரை
சுபநேரம்: 09.28-10.58 வரை
இராகுகாலம்: 04.58-06.28 வரை




உங்களுக்கு எப்படி?

## 1 கூட்டெண் பலன்கள் 1-9

இவர்கள் சூரியனுடன் செவ்வாய் இணைந்த பலன் அடைவர், நெடிதுயர்ந்து பார்க்கக் கம்பீரமாக வாட்டசாட்டமாகவும் உடல் பலத்துடன் வாழ்வர். காயம், தழும்பு ஆங்காங்கே இருக்கும்.

துணிவுகொண்டுஎதிர்த்து எதிலும்போராடி வெற்றி பெறக் கூடியவர். இந்த எண் கொண்டவர் எவரையும் எதிர்த்துச் சண்டையைத் தொடங்கி விடுவர். சொல்வதைப் புரிந்து கொண்டு நடக்கும் குணம் உள்ளவர். அரசியலில் ஈடுபடும் ஆர்வம் மிக்கவர்.

பிறந்தது நல்ல செல்வக் குடும்பமானாலும் அதைவிட சொந்த சம்பாத்தியத்தில் நன்கு வாழ்வார்.

மணவாழ்க்கையில் சற்று போராட்டம் ஏற்பட்டாலும் பின்னர் அமைதி நிலவும். இவருக்கு சொந்தமாக தொழில் அமையும். குடும்பத்தில் உள்ளவரிடம் கவனமாக இருந்தால் பிரச்சினையைத் தவிர்க்கலாம்.

அக்னி, அமிலம், மின்சாரம், இரும்பு ஆகிய தொடர்புள்ள தொழிலக வேலை அல்லது வியாபாரம் பொருத்தமானதாக இருக்கும்.

பொலிஸ், இராணுவம் போன்றவற்றில் மிகப் பெரிய பதவி கிடைக்கும். வெளிமாநிலம், வெளிநாடு சென்று தொழில் புரியும் யோகமும் இவருக்கு ஏற்படும். பித்தம், கபம் மிகுந்தவர், கோபமும் அதிகம் உள்ளவர். வயிற்று வலி, கண் வலி, தீப்புண் காயமுண்டாதல், இடிபாடுகளில் சிக்குதல் போன்றவற்றிக்கு ஆளாகலாம்.

## 2 கூட்டெண் பலன்கள் 2-1

சந்திரனில் சூரியன் சேர்ந்த ஆதிக்கப் பலனை அளிக்கும். அளவான உயரமும், மஞ்சள் நிற மேனியும் கொண்டவர். முடி அதிகமாகவும் புருவம் அடர்ந்தும் காணப்படும். இவர்கள் அழகாகவும் கண்கள் சற்று நீளமாகவும் கொண்டவராக இருப்பர்.

இவர் ஒரு சமயம் உற்சாகமாகவும் மறுசமயம் சோர்வுடனும் காணப்படுவர். எப்போதும் எதையாவது செய்து கொண்டே எதையாவது யோசித்துக் கொண்டே குழப்பமடைவர். கற்பனை வளமும் பேச்சு திறனும் அதிகமாகவே இருக்கும். தெய்வ பக்தி அதிகம் கொண்டவர். தங்களிடம் பிடிவாத குணம் சற்று அதிகமாகவே இருக்கும்.

சொந்த வீடு, நிலம் வாங்கும் யோகம் ஏற்படும். காதலுக்காக எதையும் தியாகம் செய்யத் துணிவர். பெற்றோரைப் பிரிந்து வாழும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது. புத்திர தோஷம் உண்டு. வாழ்க்கையில் முற்பகுதி பிரச்சினைக்குரியதாகவும் பிற்பகுதியில் அமைதியும் நிலவும். முற்பகுதி வாழ்க்கை பிறரைச் சார்ந்திருக்கும்.


கல்வி சிறப்பாக இருப்பதால் சட்டத்தரணி, மருத்துவராகவும். அக்னி, இரும்பு சம்பந்தமான தொழிற்சாலைகளில் பணி செய்யும் வாய்ப்பு உண்டாகும். தோட்டம், விவசாயம், மூலிகை, நெசவுத் தொழில் போன்றவற்றில் வெற்றி காண்பர். பேச்சு திறமையால் தொட்டதெல்லாம் வெற்றி தான் உங்களுக்கு.

வெப்ப மிகுதியால் நோய்கள் பாதிக்கும். கண் நோய், இரத்தக்கட்டி, உயர் குருதி அழுத்தம், மஞ்சல் காமாலை, தலைவலி, நீரிழிவு போன்ற தொல்லைகள் ஏற்படும். கவனம் செலுத்தினால் குறைய வாய்ப்புள்ளது.




# தற்பாதுகாப்பு முக்கியம்

சு.சாரங்கி




தனித்திருக்கும் பெண்களைக் குறிவைத்து நிகழும் கொலைவெறிச் சம்பவங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. நகைக்காகவும் பணத்துக்காகவும் சொத்துக்காகவும் நடக்கும் இந்தக் கொடூரங்கள் பெண்கள் மற்றும் முதியோர் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கி இருக்கிறது. குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை என பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், தனித்து வசிக்கும் பெண்கள் நகைக்காகவும் சொத்துக்காகவும் கொலை செய்யப்படும் சம்பவங்களும் அதிகரித்திருப்பது கூடுதல் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இந்த அவலத்தில் இருந்து பெண்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வது எப்படி? முதியோர், பெண்கள் பாதுகாப்பு, விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட வேண்டியது அவசியம். தனித்திருக்கும் முதியோர், குறிப்பாக பெண்கள் மனதளவில் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் திடத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆபத்து நேரத்தில் வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகள் வேறு. அதே நேரம், தனக்குத்தானே புத்திசாலித்தனமாக போராட பெண்கள் தயாராக வேண்டும். ஆபத்து நேரத்தில் அதிர்ச்சி அடையக்கூடாது. அந்தச் சூழலில் இருக்கக்கூடிய ஆயுதங்களை வைத்து தற்காத்துக் கொள்ள வேண்டும். அதே நேரம் புத்திசாலித்தனமும் வேண்டும். பேஸ்புக்கில் எங்கெங்கோ இருப்பவர்களை எல்லாம் நண்பர்களாக மாற்றிக் கொள்கிறார்கள். அருகில் வசிப்பவர்களோடு அந்நியமாக இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். வீடுகளில் தனியாக இருக்கும் இளம்பெண்கள் அயலவர்களுடன் நட்பாக இருப்பது அவசியம்.

# பணியிடத்தில் பெண்களுக்கு...

பணியிடத்தில் பெண்களுக்கு இடம்பெறும் பாலியல் வன்முறையைத் தடுப்பதும், பாலியல் வன்முறைக்கான புகார் களைப் பரிசீலிப்பதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துவதும், பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கான நடவடிக்கை எடுப்பதும் ஒரு பணியமர்த்துநரின் கடமையாகும். பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண், தான் அந்த இடத்திலிருந்து பணிமாற்றம் செய்ய விரும்பினாலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவரை வேறு இடத்திற்கு பணிமாற்றம் செய்ய விரும்பினாலோ, அதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஒரு பெண்ணுக்கு சுமுகமான பணிச்சூழலை அமைத்துத் தருவது ஒரு பணியமர்த்துபவரின் கடமையும்பொறுப்புமாகும். பாதுகாப்பான பணிச்சூழல் ஒவ்வொரு பணிபுரியும் பெண்ணுக்கும் உள்ள உரிமையாகும். பணிபுரியும் பெண்கள் மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும். நிர்வாகம் நடத்தும் கூட்டங்களில் பெண் தங்களுக்கு இழைக்கப்படும் தொல்லைகள் குறித்து பேச வாய்ப்பளிக்க வேண்டும். பெண்கள் பணிபுரிவதற்கு ஏற்ற பணிச் சூழலோடு, அவர்களின் சுகாதாரம் மற்றும் நலனும் பேணப்படுதல்வேண்டும். இதையெல்லம் பணியமர்த்துபவர் கடைப்பிடிக்க வேண்டியவை ஆகும்.

பி.குருசரன்



# ஏன் இப்படி?

பெண்ணைத் தெய்வமாக வைத்திருக்கும் நமது நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறையும், குற்றங்களும் அதிகரித்துள்ளன. அவைகள் என்னவென்று பார்க்கலாம். பெண் கருவிலிருக்கும் போதே பெண்ணை அழிப்பதற்காக பல செயல்கள் பல்வேறு வடிவங்களில் நடைபெறுகின்றன. மேலும் பெண்ணானவள் சீண்டப்படுகிறாள், அதாவது பணி புரியும் இடத்திலும் வீட்டிலும்கூட பெண்களுக்கு வன்முறைகள் நடக்கின்றன. இதிலிருந்து மீள்வதற்கு பெண்கள் பெரும் பாடுபடுகின்றனர். அதன் பின்னர் திருமணத்தில் ஒரு சீதனக் கொடுமையை அனுபவிக்கிறாள். இவ்வாறாக வாழ்க்கைப் போராட்டத்தில் போராடி சில பெண்கள் சாவின் விளிம்பிற்குள் தள்ளப்படுகிறார்கள். மற்றும் சிலர் இவ்வளவு இடர்பாடுகளையும் தாண்டி சாதிக்கிறார்கள். இன்றைக்கு பெண்கள் இல்லாத துறையே இல்லை என்று சொல்லலாம். அவ்வளவு சாதனையை பெண்கள் படைத்துள்ளனர்.

# செய்திகள்

## பரிசுத் தின நிகழ்வு இன்று குருநகரில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையமான பேர்கன் ஒஸ்லோ அமைப்பின் பரிசுத்தின நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் அந்த அமைப்பின் தலைவர் கி.சிலுவைதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக யாழ். சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையின் அதிபர் ஏ.எம்.சி. மகேந்திரன், யாழ். சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி.எல்.மகேஸ்வரன், தொழிலதிபர் ஜோன்மேரி மற்றும் எ.அலோசியஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா றோ. நேசராஜா அடிகளார் ஆசியுரை வழங்குவார். மேற்படி அமைப்பினால் குருநகர்ப் பகுதியில் நடத்தப்படும் மாலை நேர வகுப்புக்களில் பங்கேற்று வரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பரிசில்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ–51)

## ஆடலரங்கம்–3 நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.நர்த்தனஷேத்திரா நடனப் பாடசாலையின் 3 ஆவது ஆடலரங்கம் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ்ப்பாணம், நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (வ)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் முத்தையா தியாகராஜா



மண்ணில் 29 . 04 . 1930

விண்ணில் 29 . 11 . 2014

இல.28, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட முத்தையா தியாகராஜா 29.11.2014 அன்று சிவபதம் அடைந்தவேளை அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைச் சமர்ப்பிப்பதுடன், 29.12.2014 அன்று தியாகி அறக்கொடை நிலையத்தில் (T.C.T) நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

077 720 4959,
077 263 7603

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(55245)(4.7.3)



18 ஆம் ஆண்டு நினைவுகள்

அமரர் V.S.குணசிங்கம்

(ஓய்வுபெற்ற இலிகிதர்)



தோற்றம் 05.02.1931

மறைவு 16.12.1996

திதி: 27.12.2014

சேமித்த நினைவுகளும்
பதிவுகளின் உயிர்ப்புக்களும்
– வழிகாட்டிட
ஈரலிக்கும் இமைகளின் சுமைகளில்
கனவுகள் நனவாக
தங்கள் விழுதுகள் நாம்
பாதச் சுவடு பற்றி பயணத்தைத் தொடர்கின்றோம்.

"யாழகம்."
03, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(55276)(4.3.6)



31 ஆம் நாள் நினைவலைகள்

திருமதி இராசமலர் வைத்திலிங்கம்



தோற்றம் 25.05.1931

மறைவு 27.11.2014

கடந்த 27.11.2014 சிவபதம் எய்திய அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (27.12.2014) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"நவ இல்லம்"
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(55271) 4.5.3.7)



29 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் மேரிதிரேசா (கிறேஸ்) பெஞ்சமின்

தோற்றம் 09.01.1927

மறைவு 29.11.2014



கருவினிலே எழுவரையும்
பக்குவமாய் சுமந்து
ஈன்றெடுத்து அமுதூட்டி
சான்றோராய் வளர்த்தாய்
நாமுயர சந்தனமாய்
உனைத் தேய்த்து அழித்தும்
உயிருள்ள நாள்வரையும்
முழுநிலவாய் வாழ்வாய்
துன்பங்கள் சிலுவைகளை
வாழ்வினிலே கண்டும்
இறையவனில் நம்பிக்கை
கொண்டு நாளும்
வாழ்ந்தாய்
தந்தையோடு நாமிணைந்து
கலைவாழ்வில் உயர
தியாகத்தின் மறு உருவாய்
அகிலத்தில் வாழ்ந்தாய்
வாழ்வினையே நிறைவு
செய்து எமை
விட்டுப்பிரிந்து
சென்றாலும் என்றென்றும்
உங்களை நாம்
நினைப்போம்
உங்கள் ஆன்மா சாந்தி பெற இடைவிடாது நாமும்
செபிக்கின்றோம் நிச்சயமாய் நிலை வாழ்வில் மகிழ்வீர்கள்

எமது அன்புத்தாயின் இறப்பின் பின் எமதில்லம் வந்து எமக்கு ஆறுதல் கூறிய அனைத்து உறவுகளுக்கும் மற்றும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகளுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி இறைவேண்டல் செய்த அனைவருக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவன இயக்குநர்கள், பணியாளர்களுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது தேவையறிந்து பல்வேறு வழிகளிலும் உதவி செய்த அன்பு உறவுகளுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(55273)(4.3.6)



கலைவாணி கந்தபுஸ்பதேவி என்னும்
காரிகையாள் அரன்பால் அமைதியுறச் சேர்ந்து
ஆண்டுகள் ஈர்எட்டு ஆனது



மண்ணில் 23 . 10 . 1948

விண்ணில் 27 . 12 . 1998

திதி: பூர்வபட்ச நவமி
30.12.2014

அமரர் கந்தபுஸ்பதேவி அமரசிங்கம்

(இசை ஆசிரியை)

தானுண்ட நீரைத் தானம் தரும் கொண்டல் வானம் போல் பெற்ற
வாழ்வெல்லாம் ஈகைதரும் ஞானத்தைப் பெற்ற
நல்லதொரு குருவாகி ஊனத்து உள்ளத்தை உயிரிசையாலே நிறைத்தாள்
இருவர் உளம் கலந்து இல்லறத்தில் காண்கையிலே
உருகும் உறவிணைந்து உதித்த முத்து ஈரிரண்டு
பெற்றெடுத்த ஈரிரண்டும் பொன்போல் காத்து
நற்குணத்து காதலன் நாயகனின் நலம் காத்து
ஒற்றுமையாய் வாழ்வில் உயர்வெல்லாம் ஒப்பினாளே
நெஞ்சாறிக் கொள்வோம் நெஞ்சகலா நினைவுகளுடன்
நெஞ்சாறிக் கொள்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

கணவர், பிள்ளைகள், மருமகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(55220)(4.3.6)

# முதியவரை அச்சுறுத்தி பணம், நகை கொள்ளை

### கந்தரோடையில் சம்பவம்

அளவெட்டி, டிசெ.27

தனிமையில் வசித்து வந்த முதியவரை மிரட்டி நகை, பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த 24 ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் கந்தரோடை மேற்கு ஞானவைரவர் கோயிலுக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது:– சம்பவ தினம் முதியவர் பிள்ளைகள் அனுப்பிய பணத்தை வங்கியிலிருந்து எடுத்து வந்துள்ளார். இரவு 11 மணி வரை தொலைக்காட்சி பார்த்துவிட்டுத் தூங்கியுள்ளார். அதிகாலை ஒரு மணியளவில் திடீரெனத் தனது முகத்தை துணியால் யாரோ மூடுவதை உணர்ந்த அவர் கூச்சலிட்ட வேளை சத்தம் போட்டால் கொலை செய்து விடுவேன் என்று கத்தியைக் காட்டிக் கொள்ளையன் மிரட்டியுள்ளான். பணத்தை எங்கே வைத்துள்ளாய் என்று கேட்டுத் தாக்கவும் முற்பட்டான்.

திருடர்கள் அறைகளைத் துருவித் துருவி சோதனை செய்த வேளை தலைமாட்டில் வைத்திருந்த பணத்தை முதியவர் தனது இடுப்பில் செருகியுள்ளார். இதனைத் திருடன் கண்டுவிட்டான். உடனே இடுப்பில் இருந்த பணத்தையும் பறித்ததுடன் கையில் அணிந்திருந்த கைச்சங்கிலி, 2 மோதிரம், தங்கச் சங்கிலி, தொலைபேசி, 4 புதிய சாரம் என்பவற்றையும் கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். வல்லிபுரம் – வன்னியசிங்கம் (வயது–74) என்பவரிடமே 60 ஆயிரம் ரூபா பணம், 20 பவுண் தங்க நகை, கைத்தொலைபேசி, சாரம் உட்பட மொத்தம் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த–36)

# விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுத்தமான நீரைப் பருகுவோம் என்னும் தொனிப் பொருளில் சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் ஏற்பாடு செய்துள்ள விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று காலை சாவகச்சேரியில் ஆரம்பமாகி யாழ். நகர் ஊடாக தெல்லிப்பழை நோக்கி முன்னெடுக்கப்படுகின்றது.

இன்று காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் இந்தப் பேரணி ஏ–9 வீதி வழியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்து பின்னர் கே.கே.எஸ் வீதி வழியாக தெல்லிப்பழையை சென்றடையும்.

இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் யாழ்ப்பாணத்தில் உள்ள றோட்டறக்ட் கழகங்களின் உறுப்பினர்கள் பலர் பங்கேற்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தொடர்ச்சி

### தமிழர்

இது சோதிடத்துக்காக நடத்தப்படும் தேர்தல். – என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனவரி 8 ஆம் திகதி தேர்தல் திகதியை சோதிடர் நிர்ணயித்துக் கொடுத்திருக்கின்றார். அன்றுதான் சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்ட நாள். மஹிந்த ராஜபக்ஷவுக்கு இறுதிநாளாக அன்றுதான் அமையப் போகின்றது. மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே ஊடகங்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. சிவராம் கொல்லப்பட்டார். 'உதயன்' ஊடகத்தின் அச்சுப் பகுதி தீ வைத்து எரிக்கப்பட்டது.

சோதிடர்கள் சொன்னது பொய்யாகி விட்டது. மஹிந்தவின் தோல்வி உறுதியாகிவிட்டது. பத்து வருடமாக ஆட்சி செய்து தமிழ் மக்களுக்கு ஒன்றும் தராத மஹிந்த இனியா உங்களுக்குத் தரப்போகின்றார். இந்த மஹிந்த ரெஜிமென்ட் கூண்டோடு வெளியேற்றப்பட வேண்டும். அது நடக்கும். அதற்காக மைத்திரியையா அந்த இடத்தில் கொண்டுவந்து இருத்தப் போகின்றீர்கள். மஹிந்தவும், மைத்திரியும் ஒன்றுதான்.

1994 ஆம் ஆண்டு, ஜே.ஆரின் 17 வருட ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து சந்திரிகாவை சமாதான தேவதையாக ஆட்சி பீடம் ஏற்றினார்கள். நடந்தது என்ன? மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் பற்றி எதுவும் இல்லை. ஜனாதிபதியுடன் பொதுபலசேனா நிற்கின்றது. மைத்திரியுடன் ஹெல உறுமய நிற்கின்றது. தமிழ் மக்களுக்கு எப்படி விமோசனம் கிடைக்கும்.

மிளகாய் கொடுத்து இஞ்சி வாங்கிய நிலைமை ஏற்படக் கூடாது. மஹிந்தவை அகற்றி மைத்திரியை அமர்த்தி அந்த நிலைமையை நாங்கள் உருவாக்கக்கூடாது. – என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இந்தத் தேர்தலில் பிரதான இரு வேட்பாளர்களும், சிங்கள – பௌத்த வாக்குகளை முன்வைத்துதான் போட்டியிடுகின்றனர். அவர்கள் வடக்கு தமிழர்களையும், கிழக்கு முஸ்லிம்களையும், மலையக தோட்டத் தொழிலாளர்களையும் மறந்து விட்டனர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சொன்ன விடயங்கள் சரியானது. ஜனாதிபதித் தேர்தல் தென்பகுதி சிங்கள மக்களுக்கானது. ஆனால் அதற்காக அவர் செய்ததுதான் பிழை. தேர்தலை புறக்கணிக்கச் சொன்னது தவறு.

இரண்டு பிரதான வேட்பாளர்களையும் 50 சதவீதமான வாக்குகளைப் பெறவிடாமல் செய்யுங்கள். எமது நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முறைமையின் பிரகாரம், 50 சத வீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற முடியாது விட்டால் ஜனாதிபதியாக வரமுடியாது. விருப்பு வாக்கு செல்லும். இதன் போது என்னை மூன்றாவது சக்தியாக தெரிவு செய்தால், அப்போது இரு பிரதான வேட்பாளர்களும் எங்களிடம் வருவார்கள்.

இப்போது, 'ரிமோட் கொன்ரோல்' தமிழ் மக்களிடத்தில்தான் இருக்கும். தமிழ் மக்கள் தங்கள் நிபந்தனைகளுக்கு அமைய பிரதான இரு வேட்பாளரில் ஒருவரை ஆதரிக்க முடியும். தமிழ் மக்கள் இதனைச் செய்ய வேண்டும் என்றே கேட்கின்றேன்."– என்றும் அவர் தெரிவித்தார்.

எம்மைப் பொறுத்தவரையில் பிரிட்டன், ஸ்கொட்லாந்தில் நடத்தியதைப் போன்று தனிநாட்டுக்கான வாக்கெடுப்பை நாம் ஆதரிக்கின்றோம். தமிழ் மக்கள் பிரிந்து செல்ல விரும்பினால், அவர்களை அனுமதிக்க வேண்டும். இதற்காக தென்பகுதியில் வாக்கு வீழ்ச்சி ஏற்படும் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இங்கு சொல்வதைத்தான் தென்பகுதியிலும் சொல்வேன் – என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### பாலாம்பிகை கண்ணலிங்கம்

கடந்த 27.11.2014 சிவபதமடைந்த எமது அன்னை அமரர் பாலாம்பிகை கண்ணலிங்கம் அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (27.12.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்னையின் பிரிவுச் செய்தி அறிந்து மரணச் சடங்கில் கலந்து கொண்டோர் மற்றும் துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எமது குடும்பத்தினரின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**இதனை ஓர் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

குடும்பத்தினர்.

## என்றென்றும் நீங்கா நினைவுகளுடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 03 . 02 . 1921

விண்ணுலகில் 30 . 12 . 2011



அமரர் **தியாகர் அருணாசலம்** (நயினாதீவு)

திதி: பூர்வபக்க ஷஷ்டி (27.12.2014)

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்
இன்னா உலகம் புகல்"

"அம்பிகையின் அருளுடன் இவ்வுலகில்
வாழ்ந்திருந்து அன்னையின் தாள் சேர்ந்து
ஆண்டுகள் மூன்றானாலும்
உங்கள் தூய அன்பின் நினைவுகள்
என்றும் எம் உள்ளங்களில்"

**117/4, அரசடி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 08 . 1960

மறைவு 06 . 01 . 2014



அமரர் **வேலுப்பிள்ளை கந்தசாமி**

திதி: சஷ்டி (27.12.2014)

(உரிமையாளர் - கர்ணிகா நகை மாடம், விஸ்வமடு)

(முனைத்தீவு மட்டக்களப்பு)

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**25/11, அரசடி லேன்,**
**கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# செய்திகள்

## ஆலயங்களில் திருவெம்பாவை

யாழ்ப்பாணம்,டிசெ.27
வட்டுக்கோட்டை வடக்கு, பிரமணாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.
அதிகாலையில் நடைபெறும் அபிஷேகத்தைத் தொடர்ந்து உதயத்தில் மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட திருவெம்பாவை ஓதல் இடம்பெறவுள்ளது.

♦♦♦

யாழ். வண்ணார் பண்ணை நல்லதண்ணீர்க்கிணற்றடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று திருவெம்பாவை பூசை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
தினமும் அதிகாலை 5 மணிக்கு இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து திருவெம்பாவை ஓதுதல் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வரை 10 நாள்கள் நடைபெறும். (ஓ)

♦♦♦

யாழ்ப்பாணம், டிசெ.27
சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய திருவெம்பாவை விழா இன்று அதிகாலை 4மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
கிரியைகள் சிவாகமசேகரர் ந.இராசேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (வ)

## அலங்கார திருவிழா

கரணவாய்,டிசெ.27
கீழ் கருணையம்பதி அருள்மிகு வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் முதலாவது வருட அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.
தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளிப்பூசை, மணிவாசகப் பெருமான் வீதி வலம் வந்து நடராஜப் பெருமானைத் தரிசித்து திருவெம்பாவை பாடுதலுடன் 6.30மணிக்கு விழா நிறைவுறும். தொடர்ந்து காலை 8.30 மணிக்கு ஸ்நபனாபிஷேகம் நடைபெற்று மு.ப.10.30 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெறும்.
எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (வ-108)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, டிசெ.27
வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடை பெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'இறைபக்தி' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.
யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் ஜே.சந்திரப்பிரகாசம் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (வ-173)

## தரம் 6 இற்கு மாணவர்களை இணைப்பதற்கான பதிவு

தென்மராட்சி,டிசெ.27
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 2015ஆம் ஆண்டுக்கான தரம் 6 இற்கு மாணவர்களை இணைப்பதற்கான பதிவுகள் இன்று சனிக்கிழமை இடம் பெறும் என்று கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் அறிவித்துள்ளார்.
மாணவர்களை இணைப்பதற்கான பதிவுகள் ஜனவரி முதலாம் திகதி இடம் பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணங்களால் முன்கூட்டியே பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கல்லூரியில் இணைவதற்கு விண்ணப்பித்த மாணவர்களையும் பெற்றோரையும் வருகை தருமாறும் அறிவித்துள்ளார். (வ-9)

## ஆழமான சிந்தனைக்கான பார்வை தேடல் -1

கரணவாய், டிசெ.27
ஆழமான சிந்தனைக்கான பார்வை தேடல் -1 என்ற நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இமையாணன் நிபூ பிறைற் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் தேடல் பற்றிய அறிமுகத்தையும் வாழ்த்துரையையும் துணுக்காய் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் நிகழ்த்துவார். தொடர்ந்து இடம் பெறும் சமகால இளையோர் விலகல்களும் அதற்கான காரணிகள் மற்றும் தீர்வுக்கான உபாயங்கள் பற்றிய சிந்திப்பு என்ற தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக சமூக வியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் உரை நிகழ்த்துவார். (வ-108)

## சூரியோதய ச.ச.நிலைய ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், டிசெ.27
கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவும் கட்டடத் திறப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத்தலைவர் நா.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

## கிறிஸ்து பிறப்பு குடும்ப விழா

கொழும்புத்துறை,டிசெ.27
கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு குடும்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் தலைமையில் நடைபெறும் குடும்பவிழா நிகழ்வுகளுடன் மறை அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம் பெறும். (வ-135)

## வேவில் கிராமம் ஒளி பெறுமா ?

தென்மராட்சி,டிசெ.27
மட்டுவில் மத்தி வேவில் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.
அங்கு வசிக்கும் 15 இற்கு மேற்பட்ட குடும்பத்தவர்கள் தமது பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு பலதடவைகள் உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் இதுவரை பயன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சறுக்கி வீழ்ந்ததில் மாணவிக்கு கையில் பாதிப்பு

தென்மராட்சி,டிசெ.27
சறுக்கி வீழ்ந்ததில் பாடசாலை மாணவிக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது.
வீதியில் காணப்பட்ட மழை வெள்ளத்தினூடாக சைக்கிளில் சென்ற போது சறுக்கி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சரசாலையில் இடம் பெற்றது. சரசாலை வடக்கைச் சேர்ந்த (வயது-15) யேசுதாஸ்சஞ்சீவா என்ற மாணவியே இவ்வாறு சறுக்கி வீழ்ந்தவராவார்.
பாதிக்கப்பட்ட மாணவி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)


## கோட்டையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.27
யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் மோட்டார் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அந்தப் பகுதியில் புனரமைப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் மண் அகழும் இயந்திரத்தால் மண் அகழும்போது, பழைய மோட்டார் கைக்குண்டு கண்டறியப்பட்டு, அதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற 512ஆவது படைப்பிரிவினர் குறித்த மோட்டார் கைக்குண்டை மீட்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-106)

## மிருசுவில் விபத்தில் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,டிசெ.27
வீதியின் குறுக்கே சென்ற சைக்கிளை வேகமாக வந்த கார் மோதியதில் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த செல்லர் தர்மலிங்கம் (வயது-52) என்பவரே காயமடைந்தவராவார்.
காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்தில் காரும் சைக்கிளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு தங்கவேல் (அழகர்)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு தங்கவேல் 22.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், அல்லிராணியின் அன்புக் கணவரும், தங்கமணி, தங்கராசா, தவயோகேஸ்வரி (அமரர்), கனகரத்தினம், திலகவதியம்மா, தியாகராஜா (அமரர்), யோகநாதன், சிவபஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மோகன்குமார் (சுவிஸ்), இந்திரகுமார் (அமரர்), கீதா (சுவிஸ்), இளங்கீரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (சுவிஸ்), சிவானந்தன் (சுவிஸ்), சந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்துஜன், மதுஷன், கஸ்தூரி, முகுந்தன், ஜெனுஷன், சிவனியா, யூலியான், திச்சியான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(51857)(4.7.3)

# தொடர்ச்சிகள்

## கண்ணீரில்

நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டிருந்தபோதும், பிரதான நிகழ்வு உடுத்துறையில் இடம்பெற்றது. சுனாமியால் காவுகொள்ளப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நினைவாக அங்கு கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

காவுகொள்ளப்பட்டவர்களது உறவினர்கள் கல்லறைகளில் பலவகை உணவுப் பொருள்களைப் படைத்து தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர். அவர்கள் கண்ணீர் மல்க ஓலமிட்டு அழுதுபுரண்டு தமது இழப்புக்களின் வலியை வெளிப்படுத்திக் கொண்டனர். நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.ஆழியவளைமற்றும்வடமராட்சியில்மேலும் பல இடங்களிலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

மணற்காட்டில் அமைக்கப்பட்டிருந்த நினைவாலயத்திலும் மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர். சுனாமி தாக்கியநேரமான காலை 9.02 இற்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் மணற்காடு நினைவாலயத்தில் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு, முற்பகல் 9.15 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காபுரம் எ.வி.ஆனந்தனின் சிற்பக்கலைக் கூடத்திலும் நடைபெற்றது. அதில் நினைவுச் சுடரை இளவாலை பங்கு தந்தை சந்திரபோஸ் அடிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் விரிவுரையாளர் எஸ்.சிவராசா, திருமறைக் கலா மன்றத்தின் தலைவர் கலாபூசணம் பேமனஸ், தெல்லிப்பழை லயன் கழகத்தலைவர் பொ.சுந்தரலிங்கம் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### முல்லைத்தீவு

ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு முல்லைத்தீவில், பங்குத்தந்தை அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் சுனாமி நினைவாலயத்தில் இடம் பெற் றுள்ளது. மாங்குளம் பங்கு தந்தை அருட்பணி ஜேம்ஸ் பத்தி நாதரால்திருப்பலியை ஒப்பு கெடுக்கப்பட்டு, உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைவதற்கு பிரார்த்தனை செய்யப்பட்டது. மும் மதங்களையும் சேர்ந்த மதகுருக்களால் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

### வவுனியா

ஆழிப்பேரலை நினைவு நிகழ்வு வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள ஆழிப்பேரலை நினைவிடத்தில் நடைபெற்றது. வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயமும் பூந்தோட்டம் இளைஞர் விளையாட்டு கழகமும் இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன. நினைவிடத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு நினைவேந்தல் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து பொதுநோக்கு மண்டபத்தில் நினைவுரைகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் மதகுருமார்கள், மாவட்ட அரசாங்க அதிபர் னி.லு.பந்துல ஹரிச்சந்திர நாடாளு மன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ நோகதரலிங்கம், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான சி.சிவமோகன் ஜி.ரி.லிங்கநாதன், அரசியல் கட்சியை சார்ந்த உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் நரசிங்கர் ஆலய நிர்வாகசபையினர் என்ப் பலர் கலந்து கொண்டனர்.

### மன்னார்

ஆழிப்பேரலை10ஆம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. மன்னார் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்திருந்த குறித்த நிகழ்வுக்கு அதன் மன்னார் மாவட்ட இணைப்பாளர் மோகன் தலைமைதாங்கினார். இதன்போது ஆழிப்பேரலையால் உயிரிழந்த, காணாமல்போன உறவுகளுக்கு ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பிரமுகர்களால் நினைவு தீபங்களும் ஏற்றப்பட்டன. இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி.ஸ்டான்லி டி மெல், மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேசுதாசன் ஜேம்ஸ், அதன் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், நகரசபையின் உத்தியோகத்தர்கள், இடர்முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.முஹமட் றியாஸ் மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### அம்பாறை

ஆழிப்பேரலை இடரால் உயிரிழந்தவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்றன. கல்முனை மாமாங்க வித்தியாலய முன்றிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் கல்முனை கடற்கரைப்பள்ளிவாசல் மற்றும் கல்முனை ஜாமியா மன்பயில் ஹிதாயா அரபுக்கலாசாலை என்பவற்றில் மரணித்தோருக்கான துஆ பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை இடரின் 10ஆம் ஆண்டு நினைவு தினம் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழையையும் பொருட்படுத்தாது, சுனாமியால் முற்றாக பாதிக்கப்பட்ட கல்லடி, நாவலடி, டச்பார், புதுமுகத்துவாரம் மற்றும் திருச்செந்தூர் பகுதிகளில் உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளில் மெழுகுவர்த்தி ஏற்றி மலர்தூவி விசேட வழிபாடுகளில் மக்கள் ஈடுபட்டு அஞ்சலி செலுத்தினர். சுனாமியில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இடங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(ற-4,21,9,173,17,109, 402, 56,86)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூபதியம்மா கந்தசாமி



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் இல. 132/2, திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி பூபதியம்மா கந்தசாமி நேற்று (26.12.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி சண்முகம் தம்பதியரின் அன்பு மகளும், விசுவலிங்கம் கந்தசாமியின் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கரைச்சி பிரதேச சபை, மத்தியஸ்தர் சபை உறுப்பினர்-கரைச்சி) அன்பு மனைவியும், வினோத்ராஜ் (ஆசிரியர் கிளி/திருவள்ளுவர் வித்தியாலயம்) விநோதா (கிளி/பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை) காலஞ்சென்ற வினோத்ராம் மற்றும் வினோஜி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பூரணானந்தசிவம், குணபாக்கியம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகரன், ஜெயராம், கௌசிகா (இலங்கை வங்கி - வேலணை) ஆகியோரின் பாசமிகு மாமியும், தற்பரானந்தம், தேவராசா, புனிதவதி, பவளவதி, பத்மாவதி, செல்வநாயகம், உமாபதி ஆகியோரின் மைத்துனியும், துவாரகன், எழிலினி, மதுஷன், கிருஷாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.12.2014) வெள்ளிக்கிழமை அவரது திருவையாறு இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை திருவையாறு இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருவையாறு.** **தகவல்: குடும்பத்தினர்.**

### சுப்பிரமணியம் சபாபதி (மணி அண்ணா)



யாழப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சபாபதி நேற்று (26.12.2014) வெள்ளிக் கிழமை காலமாகவிட்டார்.

அன்னார் மங்களேஸ்வரியின் (மங்களம்) அன்புக் கணவரும், சுகன்யாவின் (சூட்டி) பாசமிகு தந்தையும், நாகேந்திரனின் (ரெத்தினம்) அன்பு மாமனும், சுஜீன், லவீன், கவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.'


அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நாகேந்திரன் (ரெத்தினம்-கனடா)
001 416 492 2576, 001 647 388 2576
சோதீஸ்வரன் (ரங்கன்-கனடா)
001416 8962511
ரமேஷ் (கனடா)
011 416 910 2765

தகவல்:
**க. யோகலிங்கம்**

### இராமலிங்கம் இராசரத்தினம்



தையிட்டிபுலம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சக்கலாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசரத்தினம் 25.12.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுரு (பொறியியலாளர் U.K), நந்தினி (U.K), உதயகுமார் (ஜேர்மனி), திருக்குமார் (இ.போ.சபை பருத்தித்துறை), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (U.K), சசிகலா (U.K), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகம், செல்லத்துரை, கிளிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் மற்றும் சோதிப்பிள்ளை, நல்லபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பரராஜசிங்கம், தவராஜசிங்கம் (பொது முகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் உடுப்பிட்டி), குலசிங்கம், சங்கரப்பிள்ளை, தில்லைநாயகம், பூமலர், இராசமலர் காலஞ்சென்றவர்களான நடராஜா, மயில்வாகனம், சந்திரசேகரம், கந்தையா, வள்ளிப்பிள்ளை, உமாபதி ஆகியோரின் மைத்துனரும், ரூபிதா, வினிதா, சகானா, ஷர்சிகா, கேசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளம்குளம் இந்து மயாத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சக்கலாவத்தை, கரணவாய் வடக்கு, கரவெட்டி.** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி அமுதராணி சிதம்பரநாதன்



அச்செழுவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அமுதராணி சிதம்பரநாதன் (24.12.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனபதிப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், கணபதிப் பிள்ளை சிதம்பரநாதனின் (ஓய்வு நிலை பிரதேசசபை செயலாளர் - சுன்னாகம்) அன்பு மனைவியும், நளினி (நூலக உதவியாளர் பொது நூலகம் சுன்னர்கம்), நந்தினி (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- கோப்பாய்), மதிவதனன் (கனடா), பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னம்பலம் அம்பிகைபாலனின் (லிகிதர்-றூபா பன்முக வர்த்தக நிலையம்) மாமியும், காலஞ்சென்ற ஞானசௌந்தரம் மற்றும் தம்பிநாதன் ஆகியோரின் சகோதரியும், சரோஜினிதேவி, கமலாதேவி, சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பரஞ்சோதி, தனபாலசிங்கம் மற்றும் நவரத்தினராசா, சரோஜினிதேவி, நடேசன், நவரத்தினராணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"அமுதபவனம்" அச்செழு, நீர்வேலி.** **தகவல்: குடும்பத்தினர்.**
T.P:0213734442

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா பசுபதி



நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா பசுபதி நேற்று முன்தினம் (25.12.2014) வியாழன் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பசுபதியின் அன்பு மனைவியும்,கற்பகம், சின்னம்மா, சண்முகராசா, அன்னலட்சுமி, யோகாம்பிகை, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோதீஸ்வரி, தபோதரன் (நோர்வே) ராதிகா(நோர்வே) முரளீதரன் (நெல்லியடி) சபிதா (பிரதேச செயலகம், கரைச்சி) கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், உதயசூரியன், ஞானதயா, காலஞ்சென்ற வதனன் மற்றும் வாசுகி, உமாகரன் (Hayleys agro fertilizer (Pvt) Ltd) சரிகா (பிரதேச செயலகம்-வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற அனுலா மற்றும் அனுராஜ் (பொறியியல் பீடம் இ.தெ.கி.பல்கலைக்கழகம்) லக்சிகன், மகிழினி, சிந்துஜா, நிந்துஜா, கபிலா, லோஜிதா, லதுர்சிகா, கபிஷன், ஷாஹித்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.12.2014) வெள்ளிக்கிழமை இல.273 உதயநகர் மேற்கில் உள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஆனந்தபுரம் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் துயர் பகிர்ந்துகொண்ட உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவருக்கும் மூன்றாம் நாள் செலவு நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**இல.273, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**தொ.பே: 077 9361292**

**தகவல்:**
**ப.உமாகரன் (மருமகன்)**
Hayleys Agro Fertilizer (Pvt) Ltd.

# செய்திகள்

## சம்பூர் மக்கள் அந்தரிப்பு

6 நாள்களுக்கு மேலாகத் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், மூதூர் கிழக்கு, சேனையூர், கட்டைபறிச்சான், கிளிவெட்டி, தோப்பூர், தம்பலகாமம், குச்சவெளி, ஆலங்கேணி, இறால்குழி, வெருகல், கிண்ணியா, திருகோணமலை போன்ற பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜாவும், மூதூர், மூதூர் கிழக்கு, கிளிவெட்டி ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கு. நாகேஸ்வரனும், வெருகல், தம்பலகாமம் பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தண்டாயுதபாணி மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜனார்த்தனனும் நேரடியாகப் பயணம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

பாதிப்புக்குள்ளான மக்கள் பாடசாலைகளிலும் தங்களது உறவினர் வீடுகளிலும் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலைக்குஉள்ளாகியுள்ளார்கள்.

இதேவேளை– கட்டைபறிச்சான் கிளிவெட்டி, பட்டித்திடல் மணச்சேனை அகதிமுகாம்களில்இருக்கும்சம்பூர்மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (த–40)

## சாரதிக்கு மறியல்

கொடிகாமத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக வாகனச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.


கொடிகாமம் நகரை அண்டிய ஏ–9 வீதியில் தண்ணீர் எடுக்க வந்த இருவரை வீதியில் வைத்து வாகனம் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். உடன் சென்ற யுவதி ஒருவர் காயமடைந்தார்.

விபத்து தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வாகனச் சாரதியை நேற்று சாவகச்சேரி நீதிவான் முன்னிலை யில் பொலிஸார் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை ஜனவரி ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த–9)

# 26,000 பேர் பாதிப்பு

## மன்னாரில் தொடர்கிறது மழை



மன்னார்.டிசெ.27

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதுடன் இதுவரை 7 ஆயிரத்து 293 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 26 ஆயிரத்து 155 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

இந்த மழைப் பாதிப்பினால் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில்472குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 591 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 350 பேரும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேரும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 381 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 197 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 497 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலாளர்பிரிவில்இருந்துஇடம்பெயர்ந்தவர்கள் நானாட்டான், முருங்கன், மோட்டக்கடை ஆகிய பாடசாலைகளிலும், முசலி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வேப்பங்குளம் பாடசாலையிலும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் தம்பனைக்குளம், பண்ணை வெட்டுவான், மல்லவராயன், கட்டையடம்பன் ஆகிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் சின்னப்பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலைகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களின் இயல்பு நிலையும் பாதிப்படைந்துள்ளது.மன்னார்கட்டுக்கரைக்குளத்துக்கு நீரை எடுத்துச் செல்லும் மல்வத்து ஓயா பெருக்கெடுத்திருப்பதனால் மன்னார் – மதவாச்சி பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் தம்பனைக்குளம் கிரா மம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளது. மல்வத்து ஓயா வின் நீர் மட்டம் தற்போது சுமார் 19 அடி வரை உயர்ந்துள்ளது – என்றார்.

(த–14)

# வீதிகளை ஊடறுத்து பாய்கிறது வெள்ளம்

## மட்டக்களப்பில் போக்குவரத்து பாதிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை விடாது பெய்த வண்ணமேயுள்ளது. இதனால் பல வீதிகள் ஊடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதியில் மன்னம்பிட்டி வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்வதனால் அந்தப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

மண்டூர்–வெல்லாவெளி வீதி, பெரியபோரதீவு–பழுகாமம் வீதி, நவகிரி–வெல்லாவெளி வீதி, மகிழடித்தீவு –பண்டாரியாவெளி ஆகிய உள்ளூர் வீதிகளை ஊடறுத்தும் வெள்ளம் பாய்வதால் அந்த வீதிகளின் ஊடான போக்குவரத்துக்களும் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

இதனால் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, பாணந்துறை, பதுளை, கொழும்பு, கண்டி, அம்பாறை, மங்களகம போன்ற தூர இடங்களுக்கான போக்குவரத்துக்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவ்ரத்து சபையின் மட்டக்களப்பு சாலை முகாமையாளர் ரி.மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிவரையான 24 மணித்தியாலங்களில் 123.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நவகிரியில் 125.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தும்பங்கேணியில் 131.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் ஆகக் கூடியதாகப் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார். (த–32)



# எரிபொருள் விற்பனையில் 3 சங்கங்கள் முன்னிலை



யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ். மாவட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கஎரிபொருள் விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள்மற்றும்விற்பனைகளில் கொடிகாமம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையங்கள்முன்னிலை பெற்றுள்ளன.

இதில் கொடிகாமம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் முதலிடத்தையும், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்எரிபொருள்விற்பனைநிலையம் இரண்டாம் இடத்தையும் சாவகச்சேரி எரிபொருள் விற்பனை நிலையம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்ட தரவுகளின் அடிப்படையில் இந்த எரிபொருள் விற்பனை நிலையங்கள் முன்னிலையில் உள்ளதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

அதேவேளை – கிராமிய வங்கிளின் செயற்பாடுகளில் பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிகள் முன்னிலையில் உள்ளன.

இந்தச் சங்கம் தமது சங்கப் பரப்பில் மூன்று கிராமிய வங்கிகளை அமைத்து சிறப்புச் சேவையாற்றி வருகின்றது.

முன்னிலையில் உள்ள இந்த கிராமிய வங்கிகள், எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு அண்மையில் சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன. (த–17)

# அம்பாறை வெள்ளத்தில்

அம்பாறை, டிசெ. 27

அண்மைக்காலமாகத்தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக பல மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. துறைவந்தியமேடு என்னும் கிராமம் எந்தவிதமான தரைவழிப்பாதைகளும் இன்றி வெள்ள நீரினால் சூழப்பட்ட நிலையில் உள்ளது.

அங்குள்ள மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

இவர்களது போக்குவரத்துக்கு தற்போது வள்ளங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

'அன்பே சிவம்' அமைப்பினூடாக அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உலர் உணவுப் பொருள்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை துறைவந்திமேடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடத்தில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன், கல்முனை மாநகரசபை உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், செயலாளர் புவி, அன்பே சிவம் அமைப்பின்உறுப்பினர்கள்எனப் பலரும் கலந்து கொண்டு அந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.(த)

# அபிவிருத்தியை பொறுக்காத சிலரே போலி குற்றச்சாட்டு

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.27
நாட்டின் அபிவிருத்தியைப் பார்த்துக்கொண்டிருந்த தரப்பினர் போலியான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வெற்றியை உறுதிசெய்வதற்காக அமைச்சர் ஜீவன்குமாரதுங்கவால் மொரட்டுவையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டின் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு திட்டத்தின் ஊடாக இந்த நாட்டின் அபிவிருத்திக்கான அடித்தளத்தை இட்டதாகவும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரே இடத்தில் தேங்கிக்கிடந்த பொருளாதாரத்தைத்தூக்கிநிறுத்தியதுடன், மக்களின் வருமான வழிவகைகளை அதிகரிக்கக்கூடிய வழிமுறைகளைத்தயாரித்ததாகவும் அவர் கூறினார்.

திவிநெகும வேலைத்திட்டத்தை ஆரம்பித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கி அவர்களின் வாழ்க்கையை வெற்றிகரமானதாக மாற்றுவதற்குரிய வழி வகைகளையும் தாம் ஏற்படுத்தியதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்தத் திட்டங்கள் அனைத்தின் ஊடாகவும் நாடு அபிவிருத்தியை நோக்கி நகர்கின்றபோது, அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது, குரோத மனப்பான்மையுடன் சில தரப்பினர் போலியான குற்றச்சாட்டுகளைச்சுமத்துவதாகவும் கூறினார்.

இத்தகையவர்களுக்கு கொள்கையோ அல்லது வேலைத் திட்டங்களோ இல்லையென ஜனாதிபதி இதன்போது மேலும் கருத்து தெரிவித்தார். (ற)

# ஆயுள் முழுவதுமே பதவியில் இருக்க மஹிந்தவுக்கு ஆசை

## இப்படிக் கூறுகின்றார் ரிசாத் பதியுதீன்



கொழும்பு, டிசெ.27
மூன்றாவது தடவையல்ல தனது ஆயுள் முழுவதும் ஜனாதிபதியாக இருக்க மஹிந்த ராஜபக்ஷ ஆசைப்படுகின்றார். அதற்காக அவர் எதை வேண்டுமானாலும் செய்யவும் தயாராகவே இருக்கின்றார். – இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிசாத் பதியுதீன்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக கல்முனை ஆசாத் வரவேற்பு மண்டபத்தில் அவர் நடத்திய மக்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"போர் வெற்றிக்கு நன்றிக் கடனாகவே 2010 இல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் எமது இனத்துக்கு எதிராக அநியாயங்களையே இந்த அரசு செய்தது. அதற்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்ல தண்டனையைக் கொடுத்துள்ளோம். எமது இனத்தின் மீது கை வைப்பவர் யாராக இருந்தாலும் அவருக்கும் இவ்வாறான தண்டனைகளை வழங்கத் தவற மாட்டோம்.

நாம் இவ்வாறானதொரு முடிவை எடுப்போம் என அரச தரப்பினரோ, மக்களோ நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டர்கள். ஏனெனில் நாம் கடந்த 9 வருடங்களாக அரசுக்குப் பலமாக இருந்து ஜனாதிபதியை உருவாக்கிய பங்காளி களில் ஒருவர். அபிவிருத்திக்குப் பலமாக இருந்த எங்களின் முடிவு அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்தது. ஆனால் முஸ்லிம்களின் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற கட்சியினரே இவ்வாறான முடிவை எடுப்பர் என அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட கூட்டங்களை கூட்டியிருப்பர். ஆனால் முடிவுதான் இன்னமும் எடுக்கவில்லை." – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ரூ. 2,500 மில். நட்டஈடு கோரினார் மைத்திரி

## கையொப்பத்தை தவறாகப் பயன்படுத்தியமைக்காக



கொழும்பு, டிசெ.27
தனது கையொப்பத்தினைத் தவறாகப் பயன்படுத்திய குற்றத்துக்காகப் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் திஸ்ஸ அத்தநாயகவிடம் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளார். அத்துடன் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு அமைச்சுப் பதவி வழங்கியமை தேர்தல் சட்டத்தை மீறும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது தரப்பு சட்டத்தரணிகளின் மூலம் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள நஷ்ட ஈடுகோரிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இரகசிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவித்து சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க ஆவணமொன்றினை வெளியிட்டிருப்பது எமது வெளிப்படையான உடன்படிக்கையை அவமதிக்கும் செயற்பாடாகும். அதேபோல் பொய்யான ஆவணமொன்றினை தயாரித்து அதில் எமது கையொப்பம் என தவறான இரு கையொப்பங்களை இட்டு ஊடகங்களிடம் வெளிப்படுத்தியிருப்பது சட்ட முறைப்படி குற்றமாகும். ஊடகங்களைப் பயன்படுத்தி நானும் பொது எதிரணியும் சட்ட விரோத பரப்புரையும் தேசத்துரோக செயலையும் செய்வதாக குறிப்பிட்டு ஊடகங்களின் மூலம் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நான் 1989 ஆம் ஆண்டில் இருந்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இதன்போது பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து நாட்டிற்கு சேவை செய்துள்ளதுடன் எனது கையொப்பத்தைப் பயன்படுத்தி பல நல்ல உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

இதுவரை காலமும் எனது கையொப்பத்துடன் எவ்வித சட்டவிரோத ஆவணங்களும் தயாரிக்கப்படவில்லை. எனவே இவ்வாறான நிலையில் நவம்பர் மாதம் 1 ஆம் திகதி நானும் ரணில் விக்கிரமசிங்கவும் இரகசிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகப் போலியான ஆவணமொன்றைத் தயாரித்து எங்களை அவமதித்துள்ளனர்.

எனவே இதற்கு எதிராகவும் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

திஸ்ஸ அத்தநாயக்க தற்போது ஏற்றுள்ள புதிய அமைச்சுப் பதவி தேர்தல் சட்டத்தினை மீறும் செயற்பாடாகும். அதாவது தேர்தல் காலத்தில் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குவது தேர்தல் சட்டத்தினை மீறும் செயற்பாடாகும். எனவே இது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது– என்று அவரின் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற)

# பிரதேச சபை தவிசாளர் கைது

கொழும்பு, டிசெ.27
கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த கல்நேவ பிரதேச சபை தவிசாளர் டபிள்யூ.எம் சந்திரதிலக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு கல்நேவ பொலிஸரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற)

# கணிதம் சித்தியடையாதோரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டி

## அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.27
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாதவர்களும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்று கூறியுள்ளார் அமைச்சர் பந்துல குணவர்தன.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"கணித பாடத்தில் சித்தியெய்தாத பலர் அரசியலில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர். கணித பாடத்தில் சித்தியடையாத எத்தனை பேர் நாட்டை வழிநடத்த போட்டியிடுகின்றார்கள் என்பதனை நாம் ஆராய வேண்டும்.

பொலனறுவையில் பிறந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேன, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கணிதத்தில் தோல்வியடைந்தவர்களுக்கு சலுகைகள் வழங்கியிருக்க வேண்டும்.

எனினும், கணித பாடத்தில் சித்தியடையாதவர்கள் பற்றி மைத்திரிபால சிறிசேன எதனையும் குறிப்பிடவில்லை. மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்வித்துறையை தனியார்மயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெளிவாகப் புலப்படுகின்றது" – என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தலை கண்காணிப்பதற்கு 2,885 பொலிஸ் வாகனங்கள்

## பொலிஸ் தலைமையகம் தீர்மானம்

கொழும்பு, டிசெ.27

ஜனாதிபதித் தேர்தலின் போது நிறுவப்படும் 12 ஆயிரத்து 252 வாக்களிப்பு நிலையங்களை கண்காணித்துப் பாதுகாப்பு வழங்குவதற்காக நாடு முழுவதும் 2 ஆயிரத்து 885 நடமாடும் பொலிஸ் வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இந்த நடமாடும் பொலிஸ் வாகனமொன்றுக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருடன் ஆயுததாரிகளான மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமர்த்தப்படுவார்கள் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நடமாடும் பொலிஸ் வாகனமொன்றின் மூலம் நான்கு வாக்குச் சாவடிகள் கண்காணிக்கப்படவுள்ளதோடு வாக்காளர்களின் போக்குவரத்து ஒழுங்குகள் வாக்குச்சாவடிகளின் சுற்றாடலில் நிகழும் முறைகேடுகளைத் தடுத்தல் என்பன இந்த நடமாடும் பொலிஸ் ரோந்து வாகனங்களின் கடமையாகும்.

இதுதொடர்பாக விசேடபொலிஸ் செயலணிப் படையின் ஒத்துழைப்பையும் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் இரண்டு வரையிலான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கடந்த 23ஆம் திகதியில் இருந்து பொலிஸ் பிரிவுகளுக்கு அண்மையாகத் திடீர் வீதித் தடைகளைப் போடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டமானது தேர்தல் முடிவுற்று ஒருவார காலம் கடக்கும் வரையிலும் நடைமுறையில் இருக்கும். குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின், பொலிஸ் அத்தியட்சகர்களின் அபிப்பிராயத்துக்கு அமைவாக அந்த பாதுகாப்புச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படக்கூடும் என்பதோடு ஆயுதங்களுடன் இரவில் வாகனங்களில் பயணித்துச் செல்லும் தரப்பினரை கைது செய்வதற்கு இதன்மூலம் வாய்ப்பமையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்நாடுமுழுவதிலுமுள்ள 49 வாக்கெண்ணும் மையங்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் பொலிஸாருக்குத் தெரியப்படுதியுள்ளது. அவற்றைச் சூழவும் பாதுகாப்புவழங்குவதற்குவிசேட செயலணி படைப் பிரிவை அமர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று தேர்தல் தினத்தன்று 55 விசேட கலகமடக்கும் குழுக்களை நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் பிரிவுகள் மட்டத்தில் பிரதானமான நகரங்களில் தயார் நிலையில் வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்து. அதைவிட இனங்காணப்பட்டுள்ள இடங்களில் மேலும் 97 கலகமடக்கும் குழுக்களை நிலைநிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-22)

### மஹிந்தவின் சோதிடரிடையே முறுகல்

கொழும்பு, டிசெ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர்களான சுமணதாச அபேகுணவர்தன மற்றும் சந்திரசிறி பண்டார ஆகியோருக்கிடையில் மனக்கசப்பும் முறுகல் நிலையும் தோன்றியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி தேர்தல் திகதி நிர்ணயம் தொடர்பிலேயே இம் முறுகல் நிலைமை உருவாகியுள்ளது.

இந்த மாதம் 24ஆம் திகதியில் இருந்து ஜனவரி 6ஆம் திகதி வரைக்குமான காலம் ஜனாதிபதிக்கு அபசகுனம்மிக்கதாக இருக்குமென்றும், அதன் பின்னரான நாள்களே சிறப்பாக இருக்கும் என்றும் முன்னவர் சுமணதாச தெரிவித்திருக்கும் நிலையில், தேர்தல் தினமான ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதிக்கு உவப்பான நாள் என பின்னவர் சந்திரசிறி கூறியிருந்ததே முறுகலுக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-5)

### 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, டிசெ.27

மூன்று உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் இந்த இடமாற்ற உத்தரவுகளைபிறப்பித்துள்ளார்.

பாணந்துறை, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பிரிவுக்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ.எம். கே.டி. பலிஸ்கார பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பதுளைபிரிவுக்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி. பிரேமதிலக்க பொலிஸ் வைத்திய சேவை பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திருகோணமலை பிரிவுக்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் யு.ஏ. அத்தபத்து கந்தளாய், சேருநுவர ஆகிய பிரிவுகளுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு இந்த இடமாற்றம் குறித்து அறிவிக்கப்பட்டது என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ற)



பண்டாரவளை தியத்தலாவ பகுதிகளுக்கு இடையிலான ரயில் மார்க்கத்தில் மண்மேடு சரிந்து விழுந்ததில் ரயிலொன்று தடம்புரண்டுள்ளது. கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இரவுநேர தபால் ரயில் தடம்புரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, மலையக மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து கொழும்பில் இருந்து நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ற)

### மைத்திரிக்கு சேறுபூசும் சுவரொட்டிகளை விடுவிக்க அழுத்தம்

கொழும்பு, டிசெ.27

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சேறு பூசும் விதத்தில் அச்சடிக்கப்பட்டு, தேர்தல் ஆணையாளர் பறிமுதல் செய்து மஹரகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருக்கும் சுவரொட்டிகளை விடுவிக்கக் கோரி உயர் மட்ட அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் வஜிர இருகல் பண்டார உட்பட்ட ஐந்து பேர் தம்மை அச்சுறுத்தி, குறித்த சுவரொட்டிகளை விடுவிக்க பலவந்தப்படுத்துவதாக பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அச்சகமொன்றில் இருந்து மேற்படி சுவரொட்டிகளை நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்த தேர்தல் ஆணையர், அச்சக உரிமையாளர் உட்பட்ட ஊழியர்களை கைது செய்யவும் பொலிஸாரைப் பணித்திருந்தார். (ற-5)

### 11 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி பணியகம் இதனை தெரிவித்துள்ளது.

மாத்தளை, கண்டி, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, குருநாகல், ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## மோடி வெற்றிக்கு உதவியவர் மஹிந்தவுக்காகப் பணியில்?

கொழும்பு, டிசெ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமூக ஊடகப் பரப்புரை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றியில் முக்கிய பங்காற்றிய தகவல் தொழில்நுட்ப வல்லுநர் அர்விந் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சமூக ஊடக பரப்புரைக்குப் பொறுப்பாக அவரே நியமிக்கப்பட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவர் கடந்த நவம்பரில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார் என தெரிவித்துள்ள புதுடில்லி வட்டாரங்கள், அவர் தனிப்பட்ட ரீதியில் இலங்கை ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரைக்கு உதவலாம் என குறிப்பிட்டுள்ளன.

எனினும் அர்விந் குப்தா இதனை நிராகரித்துள்ளார். தான் தேவையற்ற விதத்தில் சர்ச்சைக்குள் இழுக்கப் படுவதாக தெரிவித்துள்ள குப்தா தான் இந்த தகவல்களால் குழப்பமடைந்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் இந்த தகவல்களை உறுதிப்படுத்த மறுத்துள்ளதுடன், ஜனாதிபதியின் பரப்புரைக்கு உள்நாட்டவர்களும், வெளிநாட்டவர்களும் பணியாற்றுகின்றனர், அவர்களில் சிலர் சுயவிருப்பத்தின் பேரில் பணியாற்றுகின்றனர் எனத் தெரிவித்துள்ளன. (ற)



# தொடர்ச்சிகள்

## தேர்தல்

தொடங்கியுள்ளன. இந்த நிலையில் அரச அதிகாரிகள் நேரடியாக தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.குருநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பங்கெடுத்த பரப்புரைக் கூட்டங்களில் பங்கெடுத்ததுடன், அரச தொலைக்காட்சியில் பரப்புரை நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளார்.

இதனைவிட, தெல்லிப்பழை பிரதேச செயலக, உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கடந்த 24 ஆம் திகதி தபால்மூல தேர்தல் கடமைக்குச் செல்லாமல், பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் பரப்புரை மேற்கொண்டுள்ளார் என்று தேர்தல்கள் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நடவடிக்கையை தேர்தல் முடியும் வரையில் ஒத்தி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ள போதும், கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் கையளிப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

தேர்தல் விதிமுறை மீறல்கள் வடக்கில் இடம்பெற்று வருகின்ற போதிலும், அதனை தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளோ, தேர்தல்கள் கண்காணிப்பாளர்களோ கண்டுகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## வாக்களிக்க

அதனை விட, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸாருக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் வாக்களித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த தபால்மூல வாக்காளர்கள் 25 ஆயிரத்து 930 பேரில், 85 சதவீதத்துக்கு மேலானோர் வாக்களித்துள்ளனர் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வாக்களிக்காத எஞ்சிய வாக்காளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்களிக்க முடியும். அன்றைய தினமே தபால்மூல வாக்களிப்புக்கான இறுதித் தினமாகும். (ந-5)

## மழையை

பாகங்களிலும் வானிலை மிகமோசமான நிலையில் உள்ளது. பெரும்பாலான ஆறுகள் பெருக்கெடுத்து பாய்வதுடன், குளங்களின் வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

அதனால் நாட்டின் தாழ் நிலப் பகுதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அத்துடன் மலையகத்தில் மண்சரிவு அபாயமும் நிலவுகின்றது. வெள்ளம் வடிந்தாலும், தொடர்ந்தும் சீரற்ற காலநிலையே நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதன் காரணமாக ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நேரத்திலும் கனமழைக்கான வாய்ப்பு இருப்பதால், வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பெருவெள்ளம் ஏற்பட்டால், நிலைமையை சமாளிப்பதற்கு படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படி மாவட்ட தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்வது, வாக்களிப்பு நிலைய அதிகாரிகளை கொண்டு செல்வது, வாக்களிப்பு முடிந்த பின்னர், வாக்குப் பெட்டிகளை வாக்கு எண்ணும் நிலையத்துக்கு அனுப்பி வைப்பது உள்ளிட்ட தேவைகளுக்கு, படகுகளை பயன்படுத்த தயாராக இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன், வெள்ளத்தினால் பாதிக்காத வகையில், வாக்களிப்பு நிலையங்களை உயரமான கட்டடங்களில் அமைக்கவும் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். (ந-5)

## கடலில்

பொதிகளைக் கைப்பற்றியதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யுவான் நந்த நாராயண 'உதய'னுக்குத் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

பருத்தித்துறை இன்பர்சிட்டி கடலில் சந்தேகத்திற்கு இடமான நடமாட்டங்கள் காணப்படுகின்றன என இரகசியத் தகவல் ஒன்று எமக்குக் கிடைத்தது. இதனை அடுத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவின் பேரில் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் வழி நடத்தலில் எனது தலைமையிலான பொலிஸ் குழுவினர் தீவிர தேடுதலை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் காலை 7 மணியளவில் இன்பர்சிட்டி கடலில் சாக்கு ஒன்று கரையொதுங்குவது பொலிஸாரால் அவதானிக்கப்பட்டது. அதனைப்பரீட்சித்தபோது நீர் உட்புகாதபடி பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் இனங்காணப்பட்டன. இந்தக் கஞ்சா கேரளா கஞ்சா ரகத்தைச் சேர்ந்தது-என்றார்.

இவை இந்தியாவில் இருந்து கடத்திக் கொண்டு வரப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த கஞ்சா 50 லட்சம் பெறுமதியுடையது எனப் பொலிஸார் கூறினர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பெரும் கடத்தல் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுச் சுமார் 140 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஐவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-109-108)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம்-பளைக்கும் இடையில் A9 பாதையில் முக்கிய ஆவணங்களுடன் நீல கலர் சொப்பின் பாக் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0777 667715




## வெளியேறினார்

ஆதரவு யாருக்கு என்பது தொடர்பில் அறிவிப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது. அனேகமாக அவர் கட்சி மாறலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுபல சேனா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்குமாக இருந்தால், ஆளும் கட்சியிலிருந்து வெளியேறுவேன் என்று பைஸர் முஸ்தபா தெரிவித்திருந்தார். இந்த நிலையில் பொதுபல சேனா நேற்று முன்தினம் ஜனாதிபதியை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளது. (ந-5)

## பதுளையில்

காணாமற் போயுள்ளதாகவும், 5 வீடுகளுடன் சேர்த்து பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மண்சரிவு அபாயம் தொடர்ந்தும் நிலவும் என்றும் – 11 மாவட்டங்கள் மண்சரிவு அபாயம் உள்ள பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால், மலையகத்தில் மேலும் இடர் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெள்ளப் பெருக்கு

அதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக இதுவரை 6 லட்சத்து 69 ஆயிரத்து 557 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 648 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 385 பேரும், வவுனியாவில் 3 ஆயிரத்து 116 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 299 பேரும், கிளிநொச்சிப் பகுதியில் 4 ஆயிரத்து 454 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 294 பேரும், முல்லைத்தீவில் 3 ஆயிரத்து 145 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 715 பேரும் வட மாகாணத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அத்தோடு, சீரற்ற காலநிலை காரணமாக மலையக மார்க்கத்துக்கான அனைத்து ரயில் சேவைகளும் நேற்றுக் காலை முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மலையகம் மட்டுமன்றி, கிழக்கு மாகாணத்துக்குமான போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. பொலன்னறுவை – மன்னம்பிட்டி வழியாக மட்டக் களப்பு செல்லும் பிரதான வீதி மற்றும் அம்பாறை வழியாக மட்டக்களப்பு செல்லும் வழி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையாலேயே இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ந-5)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான 01.01.2015 - 31.12.2015 வரையுள்ள காலப்பகுதிக்கான ஏலக்கேள்வி அறிவித்தல்

ஏலம் கோரும் திகதி :- 30.12.2014 , பி.ப 14.00 மணி
வைப்புப் பணம் செலுத்தும் திகதி :- 30.12.2014 ந.ப. 12.00 மணிவரை
இடம் :- வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலக மண்டபம்

### ஏலக் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் |
|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | |
| 01 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 447,200.00 | 5,000.00 |
| 02 | கொட்டடிச் சந்தை | 4,000.00 | 500.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | |
| 03 | உடுப்பிட்டிச் சந்தை | 912,500.00 | 5,000.00 |
| 04 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 137,800.00 | 5,000.00 |
| 05 | சாண்டா சந்தை கோழியிறைச்சிக்கடை | 65,700.00 | 500.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | |
| 06 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 42,300.00 | 500.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் கேள்வி வைப்புப் பணத்தினை 30.12.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் தலைமை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்று ஏலக்கேள்வியில் கலந்து கொள்வதுடன், சித்திகரக் குத்தகைக்காரர் உடனடியாக குத்தகைத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT, NBT ஆகியவற்றை உடனடியாகச் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். தவறின் அடுத்த கேள்விக்காரர் பணம்செலுத்தும் பட்சத்தில் அவருக்குக் குத்தகை வழங்கப்படும்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.
27.12.2014

பொ.வியாகேசு,
தவிசாளர்.

(சி/18443) (4.6.3)

# விளையாட்டு

### இருநாள் பயிற்சி முகாம் யாழ்.மத்திய கல்லூரியில்

ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஏற்பாட்டில் யாழ். , கிளிநொச்சி, மன்னார், வவுனியா,முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் 13,15,17,19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அணிகளில் இடம்பெறும். வீரர்களுக்கு இருநாள் பயிற்சி முகாம் நாளையதினம் ஞாயிறும் மறுநாள் திங்களும் (28,29ஆம் திகதி) காலை 8.30 மணி முதல் மாலை 4மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.
ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உயர் மட்ட பயிற்சியாளர்களினால் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு பயிற்சிகளில் திறமைகளை வெளிப்படுத்தும் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, மேலதிக பயிற்சிகள் கொழும்பில் வழங்கப்படும்.
இந்தப் பயிற்சி முகாமில் அனைத்து வயதுப் பிரிவு வீரர்களையும், கிரிக்கெட் பயிற்சியாளர்களையும், அணி பொறுப்பாசிரியர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறும், பாடசாலை அதிபர்கள் பங்குபற்றும் வீரர்களின் பயிற்றுநர்களின், பொறுப்பாசிரியர்களின் விவரங்களை யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சித ஹேரத்திடம் தெரியப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

# வடமராட்சி மாணவர்களுக்கு வர்ண விருதுகள் கௌரவம்

கரணவாய்,டிசெ. 27
வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சுமார் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் வலயத்தின் வர்ண விருது நிகழ்வில் வைத்து விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
வடமராட்சி கல்வி வலயம் நடத்திய 4ஆவது வர்ண இரவு விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெற்றது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உட்பட பலரும் மாணவர்களுக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.
வலய மாகாண மற்றும் தேசிய மட்டத் தடகளம் மற்றும் பெரு விளையாட்டுக்கள் என்பவற்றில் பங்குபற்றி சாதனை படைத்த சுமார் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த வர்ண விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.
இதில் இவ்வருடத்துக்கான வலய மட்டம் சகலதுறை வீரராக சிதம்பராகக் கல்லூரி மாணவன் பி.திவாகரனும், சிறந்த சகலதுறை வீராங்கனையாக உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஆரணியும் தெரிவு செய்யப்பட்டதோடு சிறந்த தடகள வீரர்களாக 15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எம்.அபிராம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி ஏ.அபிநயா ஆகியோரும், 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மாணவன் எஸ்.வனஜன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஆரணியும், 19 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மாணவன் பி.மாதுஜன், வடஇந்து மகளிர் மாணவி மலர்வாணி ஆகியோரும், 21 வயதுப் பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.மாதுஜன், ஞானாசாரியார் கல்லூரி மாணவி கே.சோபிதாவும் தெரிவு செய்யப்பட்டனர்.




சிறந்த மைதான வீரர்களாக 15 வயது பிரிவில் கலட்டி றோ.க.த. பாடசாலை மாணவன் ஏ.ஜெராட் அஜித், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி அபிநயா ஆகியோரும், 17 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் வை.அபிதரன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ். ஆரணி ஆகியோரும், 19 வயதுப் பிரிவில் சிதம்பராக் கல்லூரி மாணவன் பி.தவாகரன், வட இந்து மகளிர் கல்லூரி மாணவி மலர்வாணி ஆகியோரும், 21 வயதுப் பிரிவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவன் ஏ.ஜெயப்பிரியன், நெல்லியடி மத்திய கல்லூரி மாணவி எஸ்.தயானி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (த-108)



# வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வல்வை

கரணவாய்,டிசெ. 27
முதலாவது கோலை அடித்து அசத்தினாலும் வல்வை அணியின் அசத்தலான அதேவேளை அதிரடியான ஆட்டத்தினால் 3–1 என்ற கோல்கணக்கில் வெற்றிக் கிண்ணத்தை இழந்தது நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம்.
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.
இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த வல்வை விளையாட்டுக்கழகமும், வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின.
மிகவும் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் ஆரம்பமான இவ்வாட்டத்தில் இரு அணியினரும் ஆரம்பம் முதல் கோல் போடுவதற்கு முனைப்புக் காட்டினர். இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்பு நிலை காணப்பட்டது.
இந்தச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் கலைமதி அணியைச் சேர்ந்த ரஜனிகாந்த் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் போட ஆட்டம் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியது.
பதில் கோல் போடுவதற்கு மேலும் முனைப்புக் காட்டிய வல்வை அணி 12 ஆவது நிமிடத்தில் வசீகரனின் உதவியுடனும் 18 ஆவது நிமிடத் தில் வசந்தின் உதவியுடனும் கோல்போட ஆட்டம் மேலும் சுவாரசியமாக தொடர்ந்து இரு அணியும் மேலதிக கோல்கள் போடாத நிலையில் 2:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் 2 அணி வீரர்களும் புது உத்வேகத்துடன் மோதிக் கொண்டனர். இதனால் பந்து இரு பகுதி கோல் பிரதேசங்களையும் மாறிமாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் போட்டி நிறைவடைய சில மணி நேரம் இருக்கையில் வல்வை அணியைச் சேர்ந்த சண்முகதாஸ் கோல் ஒன்றைப் போட அவ்வணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது வல்வை அணி.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எஸ். மெடின் கலந்து சிறப்பித்தார். (த-108)

# அடுத்த சுற்றுக்குள் இமையாணன் மத்தி

பரபரப்பான ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம்.
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எப் ஏ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன.
இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன மோதிக் கொண்டன.
இரு அணிகளும் ஒரே கிராமத்தைச் சேர்ந்த அணிகள் என்பதால் மைதானத்தில் பரபரப்பு நிலை காணப்பட்டது. ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் விதிகளை மீறும் வகையில் விளையாடியதால் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். இதனால் 10பேருடன் விளையாட வேண்டிய சூழ்நிலை அவ்வணிக்கு ஏற்பட்டது.
இருந்தபோதும் அணியினரின் கூட்டு முயற்சியால் 16 ஆவது நிமிடத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக முன்கள வீரர் திலக்ஜனன் முதலாவது கோல் போட ஆட்டம் சூடு பிடித்தது. இதனால் பந்து அங்கும் இங்கும் அலைந்ததே தவிர கோல் கம்பங்களுக்குள் செல்லாது தடுக்கப்பட்டன. இதனால் 1:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் இரு அணியினரும் சில மாற்றங்களுடன் இறங்கி அசத்தலாக ஆட ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. இந்தச் சூழ் நிலையில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் கஜேந்திரன் பதில் கோல் அடிக்க அணியின் ஆதரவாளர்கள் ஆர்ப்பரித்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீண்டநேரம் நீடிக்கவில்லை. ஆட்டத்தில் 56 ஆவது நிமிடத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக கோல்ப் பிரதேசத்தில் வைத்து அவ்வணி வீரர் ஒருவர் விதிகளை மீறும் வகையில் விளையாடியதால் எதிரணிக்கு தண்டனை உதை ஒன்று வழங்கப்பட்டது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக வீரர் சுலக்ஷன் அதனை நேர்த்தியாக உதைத்து கோலாக்க 2:1என்று இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் முன்னிலை பெற்றது.
இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைய 10 நிமிடங்கள் இருக்க இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக வீரர் திலக்ஜனன் கோல் ஒன்றைப் போட 3:1 என்ற அடிப்படையில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-108)

# புகுமுக மாணவரின் தடகளப் போட்டிகள்


## யாழ். பல்கலைக்கழகத்தில்

வலி. வடக்கு, டிசெ. 27
யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவர்களின் தடகள விளையாட்டுப் போட்டிகள் கடந்த 14ஆம் திகதி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்றன.
பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையே நடைபெற்ற இந்தப் போட்டியில் கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.
சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விளையாட்டு வீரரும் கொழும்பு மோதரை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளருமான ஏ.ஈ.மகிதரன் மற்றும் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை இணைப்பாளரும் விஞ்ஞானபீடத் தலைவருமான ஸ்ரீ சற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-86)



# விளையாட்டு

## மக்கலம் அதிரடியில் நியூஸிலாந்து எழுச்சி



நியூஸிலாந்துமற்றும்இலங்கை அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றையதினம் நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய லாதம் 2 ஓட்டங்களுடனும், றுதர் போர்ட் 18 ஓட்டங்களுடனும் பெரிதாகப் பிரகாசிக்காமல் வெளியேற நியூஸிலாந்து அணி 60 ஓட்டங்களுக்குள் அதன் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்து தவித்தது. அடுத்து வந்த ரெய்லரும் ஏமாற்றமளிக்க 88 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள் பறி போயிருந்தன. அடுத்து வந்த மக்கலம் வில்லியம்சனுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்த அணி படிப்படியாக ஓட்டங்கள் குவிக்கத் தொடங்கியது. இருவரும் இணைப்பாட்டமாக 126 ஓட்டங்களைக் குவித்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 214 ஆக இருந்த போது வில்லியம்சன் 54 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த நீஸம் மக்கலத்துடன் இணைந்து ஒரு நாள் போட்டிப் பாணியில் வெளுத்து வாங்க நியூஸிலாந்தின் ஓட்டங்கள் கிடுகிடுவென உயர ஆரம்பித்தது. அதிரடியைக் கையிலெடுத்த மக்கலம் 74 பந்துகளில் சதம் கடந்து அசத்தினார். தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்ட இவர் 18 நான்குகள் 11 ஆறுகள் உள்ளடங்கலாக 134 பந்துகளில் 195 ஓட்டங்களைக் குவித்து வெளியேறினார். மக்கலத்தை தொடர்ந்து நீஸம் 85 ஓட்டங்களுடன்வெளியேற நேற்றைய ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 7 இலக்குகள் இழப்புக்கு 429 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.கிறைக் 5 ஓட்டம் எதனையும் செளத்தி ஓட்டமெதனையும் பெறாமலும் களத்தில் உள் ளனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக மத்தியூஸ் 2 இலக்குகளையும் லக்மல், எறங்க, பிரசாத், கௌசல் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தின் இரண்டாவது நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படிஅதிகாலை3.30மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

## மெல்பேர்ன் ஆட்டத்தில் இந்தியா வெல்லக்கூடும்



ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தற்போது நடந்து வரும் டெஸ்ட் தொடரில் இந்தியா 0:2 என்று பின் தங்கியிருந்தாலும், மெல்பேர்ன் மைதானத் தில் இந்தியா வெற்றி பெற ஒரு வாய்ப்பு இருக்கிறது என ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி ஒரு ஆட்டத்தில் வெல்லும் என்றால் அது மெல்பேர்ன் மைதானத்தில் தான். ஆஸ்திரேலிய அணிக்குள் நடக்கும் விடயங்களும், மெல்பேர்ன் மைதான ஆட்டக்களமும் இந்திய அணிக்குப் பொருத்தமாக இருக்கும். மந்தமான நில மட்ட ஆடுகளம் இந்திய அணிக்குச் சாதகமாக இருக்கும். எனவே இந்திய அணிக்கு இங்கு ஒரு வாய்ப்பிருப்பதாகவே நான் கருதுகிறேன். ஆனால், ஆஸ்திரேலியா தாங்கள் வழக்கமாக ஆடும் விதத்தில் ஆடினால் மெல்பேர்னிலும் 4 நாள்களில் ஆட்டம் முடிந்து விடும். டோனியின் தலைமையின் மீதும் இந்திய அணியின் அணுகுமுறை மீதும் ஏதேனும் விமர்சனம் இருக்குமேயானால் நான் அவர்களுக்குக் கூறுகிறேன். ஆக்ரோஷமான கிரிக்கெட்டுக்கான அறிகுறிகளை அவர் பிரிஸ்பேர்ன் டெஸ்ட் ஆட்டத்தில் காண்பித்தார். கள வியூகமும் ஆக்ரோஷமாகச் செய்தார். ஆனால் இவையெல்லாம் அவர்கள் வெற்றிக்கு சாதகமாக வேண்டும். இந்தியாவில் ஆடும் போது ஆட்டத்தைக் கொஞ்சம் கூடுதலாக இழுக்கலாம். ஆனால் அந்தவகை துடுப்பாட்டம் ஆஸ்திரேலியாவில்சரிவராது. எனவேவெற்றிபெறவே இங்கு ஆடவேண்டும். ஏனெனில் 4 நாள்களில் ஆட்டத்தை முடிக்க அவர்கள் ஆடுவார்கள். நான் பார்த்த வரையில் ஆஸ்திரேலியாவில் விளையாடும் அணிகள் வேகமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருப்பதையே நான் அறிவேன் இவ்வாறு கூறியுள்ளார் பொண்டிங். (த–ரி)

## ஆஸ்திரேலியா நிதான ஆரம்பம்



ஜாம்பவான்களின் தொடர் என்று வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றையதினம் மெல்பேர்னில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரராக களமிறங்கிய வோர்ணர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது வெளியேற ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ஆஸ்திரேலியா தனது முதல் இலக்கை இழந்து தவித்தது. இருப்பினும் தொடர்ந்து வந்த வொட்சன் றொயேர்ஸுடன் இணைந்து இணைப்பாட்டமாக 115 ஓட்டங்களைப் பகிர்ந்த வேளையில் அணியின் இரண்டாவது இலக்காக றொயேர்ஸ் 57 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே வொட்சன் 52 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார். இதனால் ஆஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை 115 ஆக இருந்தபொழுது 3 இலக்குகளை இழந்து தவித்தது.

தொடர்ந்து வந்த சிமித் நிதானமாக ஆடி அணிக்கு பலம் சேர்த்துக்கொண்டிருந்தாலும் மறுமுனையில் மார்ஸ் 33 ஓட்டங்களுடனும் பேர்ண் 13 ஓட்டங்களுடனும் ஏமாற்றம் கொடுக்க நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஆஸ்திரேலியா அணி 5 இலக்குகள் இழப்புக்கு 259 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சிமித் 72 ஓட்டங்களுடனும் ஹடின் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக யாதேவ் மற்றும் சமி 2 இலக்குகளையும் அஸ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

## மக்கலம் தவறவிட்ட 2 உலக சாதனைகள்



நியூஸிலாந்து மற்றம் இலங்கை அணிகளுக்கிடையில் தற்பொழுது நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்தின் தலைவர் மக்கலம் இரண்டு உலக சாதனைகளை தவறவிட்டார். இலங்கை பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் பறக்கவிட்ட மக்கலம் 134 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 17 நான்குகள், 11 ஆறுகள் உள்ளடங்கலாக 195 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். 5 ஓட்டங்களால் இரட்டைச்சதத்தை நழுவவிட்டதன் மூலம் குறைந்த பந்துகளில் மிக வேகமாக இரட்டைச்சதம் கடந்த வீரர் எனும் சாதனையை நழுவவிட்டார். இதுவரை அஸ்ரில் என்ற வீரர் 153 பந்துகளில் இரட்டைச் சதம் க்டந்தமையே சாதனையாக உள்ளது. இந்தச் சாதனையை முறியடிக்க 18 பந்துகளில் 5 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் மக்கலம் ஆட்டமிழந்தமை ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இதுவரை இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டங்களில் தனிமனிதரால் ஒரு இன்னிங்ஸில் பெறப்பட்ட அதிக ஆறு ஓட்டங்களாக அக்ரத்தால் பெறப்பட்ட 12 ஆறுகளுமே அமைந்துள்ளன. நேற்றைய இன்னிங்ஸில் மக்கலம் 11 ஆறுகளைப் பெற்றவேளையில் ஆட்டமிழந்தார் இதுவும் மக்கலத்தினால் நழுவவிடப்பட்ட மற்றுமொரு சாதனையாகஅமைந்தது. (த–ரி)

# செய்திகள்

## தவானைக் கத்தியால் குத்தினார் ஹோக்லி

### டோனியின் நகைச்சுவை



பிரிஸ்பன் டெஸ்ட் ஆட்டத்தின் அந்த சர்ச்சைக்குரிய 4 ஆம் நாள் காலையில் தவானுக்கும் விராட் கோஹ்லிக்கும் தகராறு ஏற்பட்டதாக எழுந்துள்ள செய்திகளை டோனி தனக்கேயுரிய நகைச்சுவை உணர்வுடன் மறுத்துள்ளார்.

அதாவது, வலைப் பயிற்சியில் தவான், கோஹ்லி இருவருமே காயமடைந்தனர். இந்நிலையில் அன்று தவான் தான் களமிறங்க மறுத்ததாகவும், அதன் பிறகு கோஹ்லிக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் நடந்ததாகவும், அப்போது கோஹ்லி, தவானை நோக்கி சவாலைச் சந்திப்பதிலிருந்து ஓடுகிறாய் என்று கூறியதாகவும், அணி இயக்குநர் ரவிசாஸ்திரி இருவரையும் சமாதானம் செய்ததாகவும் செய்திகள் எழுந்தன.

இதனை டோனி தனக்கேயுரிய நகைச் சுவையான பாணியில் மறுத்துக் கூறும் போது, ஆம்! அதுதான் உண்மை கத்தியைக் கொண்டு விராட் கோஹ்லி, தவானை குத்தினார். அதிலிருந்து அவர் மீண்டவுடன் களத்துக்குள் அவரை தள்ளிவிட்டோம். சும்மா போங்கள்! இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பான வெறும் கதைகள். மார்வெல், வோர்ணர் பிரதர்ஸ் இதனைக் கொண்டு படம் தயாரித்து விடலாம். எங்கிருந்து இந்தச் செய்திகளெல்லாம் முளைக்கின்றன என்பது எனக்குப் புரிவதில்லை. அணியிலிருந்து யாராவது ஒருவர் இதனை உங்களிடம் கூறியிருந்தால் அவர் பெயரை எங்களுக்குத் தெரிவியுங்கள். ஏனெனில் அவரது கற்பனைத்திறன் அபாரம். அவர் உடனடியாக வோர்ணர் பிரதர்ஸ் போன்ற திரைப்பட நிறுவனத்துக்குத் தேவைப் படுகிறார். அந்த நபர் எங்கள் ஓய்வறையில் இருக்க வேண்டிய நபரேயல்ல. ஏனெனில் நடக்காத ஒன்றை அவர் படைக்கிறார் என்றால் அவர் உண்மையில் அபாரத் திறமை கொண்டவர் தானே. இப்படிப்பட்ட கதைகள் பத்திரிகைப் பிரதிகள் விற்கப் பயன்படும். ஆனால் உண்மையில் அப்படிஎதுவும்நடக்கவில்லை என்பதே உண்மை. ஓய்வறை சூழல் அற்புதமாக உள்ளது. எந்த ஒரு விவகாரமும் இல்லை. நாங்கள் அயல் நாடுகளில் விளையாடும் போது கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போதெல்லாம் ஊடகங்களிடம் இப்படிப்பட்ட செயற்பாடுகள் தோன்றுகின்றன. சில பத்திரிகையாளர்கள் தங்களுக்கே உரிய பாணியில் கதைகளை உருவாக்குகின்றனர். அதனை வெளியிடவும் செய்து விடுகின்றனர் என்று கூறினார்– டோனி. (த–ரி)

## தோல்விக்கு இந்தியாவே காரணம்

கடந்த இரண்டு டெஸ்டுகளிலும் இரு அணிகளிலும் சில வீரர்கள் வாக்குவாதங்களில் ஈடுபட்டனர். அந்த அணுகு முறை மூன்றாவது டெஸ்டிலும் தொடருமா என்ற கேள்விக்கு பதிலளித்த ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித், இந்தியர்களை நாங்கள் வெறுப்பேற்றத் தேவையில்லை. அவர்களே தங்களை வெறுப்பேற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் தவறையும் செய்து விட்டுப் புகாரும் கூறுகிறார்கள். இந்த டெஸ்டில் அதுவே அவர்களுக்கு இடையூறாக இருக்கும் என்று நம்புகிறேன். டெஸ்ட் தொடரை 4:0 என வெல்வது சுகமானது தான் என்றாலும் இப்போது இந்த டெஸ்டில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். பாக்ஸிங் டே டெஸ்டில் ஆடுவது மட்டுமில்லாமல் அணிக்குத் தலைமை யேற்பதும் அற்புதமான அனுபவம் –என்றார். (த–ரி)


**பணியாளர் தேவை**

கணினி பட வரைதலுக்காக * Ms Office * Photoshop தெரிந்த ஆண், பெண் பணியாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
வயதெல்லை: 18-30, நேர்முகப் பரீட்சை 2014.12.28
நேரம் : 2.00 pm - 4.00 pm,
இடம்: PROPERTY GROUND இல.30, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (GERMAN INSTITUTE அருகில்)
தொடர்புகளுக்கு:
T.P: 077 4444267
email: info@propertyground.com

**வெளிவந்துவிட்டது**
**வரலாறு – தரம்-10**
அலகு-01
வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்
(புதிய பாட நூலுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது.)
ஆசிரியர்: R.S. சந்திரன்
கிடைக்கும் இடங்கள்:
- றோயல் அக்கடமி - யாழ் நகர்
- பூபாலசிங்கம் - யாழ் நகர்
- அன்னை புத்தகசாலை - யாழ் நகர்



தொடர்புகளுக்கு: 0776649134

**மகா சில்க்ஸ்**
**மாபெரும் மலிவு விற்பனை**

புதுவருடத்தை முன்னிட்டு

| | | | |
|---|---|---|---|
| ★ சல்வார் | : | ~~3500/=~~ | 1000/= |
| ★ சல்வார் | : | ~~2500/=~~ | 500/= |
| ★ டெனிம் ஸ்கேட் | : | ~~1500/=~~ | 300/= |
| ★ ஸ்கேட் | : | ~~1100/=~~ | 400/= |

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின் றோம்.
மகா சில்க்ஸ்
33, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

**சிங்கர் மெகா சேல்**
இடம்:- 125, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
[ மத்திய பேருந்து நிலையம், நியூ மாக்கட் முன்பாக]
காலம்:- 2014 Dec 25- 30 வரை
சகல விதமான இலத்திரனியல் வீட்டுப் பாவனைப் பொருட்களை 60% வரையான விலைக் கழிவுடனும், உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.



SINGER SAMSUNG SISIL Whirlpool
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!...
விநியோகம் இலவசம்
தொ.பே: 021 222 5408
021 567 6747

**DCM** யாழ். நகர்
A/L 2017
கலை, வர்த்தக தொழில் நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் ஜனவரி 03 சனி 8.00 am

**NEC**
இரு இடத்திலும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2017 கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2015 சனி காலை 9.00 மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

**Tiles (மாபிள்) வேலைகள் செய்துகொடுக்கப்படும்.**
★ மிகவும் குறைந்த விலை
★ மிகச்சிறந்த தராதரம்
★ குறித்த தவனையில்
★ 6 மாதகால வேலை உத்தரவாதம்
★ வீடுகள், ஆலயங்கள், திருமணமண்டபங்கள், வங்கி கள், கடைகள் போன்ற சகலவிதமான இடங்களுக்கும் எமது சேவைகள் குறித்த தவணையில் செய்துதரப்படும்.
★ தனியார் Construction Company களில் Subcontract முறையில் வேலைகள் செய்துகொடுக்கப்படும்.
★ எமது வேலைகள் முன்னணி பொறியியல் நிறுவனங்களின் பொறியியலாளர்களினால் மற்றும் வெளிநாட்டு பொறியியலாளர்களினால் பாராட்டுகளும் பெற்றவை என்பது குறிப்பிடத் தக்கது.
தொடர்புகளுக்கு: 077 35 78 058

**VAN தேவை**
''யாழ். உலா'' நிறுவனத்துக்கு மாத வாடகை அடிப்படையில் VAN உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: 077 9999030

**PERSONAL CLASS**
PHYSICS A/L-2017
ஆரம்பம் :- 28.12.2014 ஞாயிறு மாலை 5.00 - 6.00 மணிவரை
ஆசிரியர்:- ம. ஸ்பெல்மஸ் (B.Sc)
இடம்:- 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 611 6724

**CHEMISPHERE**
நகுலேஸ்வரா வீதி, இளவாலை
Chemistry for A/L 2017
ஆரம்பம் 28.12.2014 (5.00 pm)
J.Jeyarajah B.Sc (Hons) Spl.in. Che

**Sky Computers (Pvt) Ltd**
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம். TP:0212221417
Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.